இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *5397/2010*

தி/ள். நடேசன் ஏஜென்சீஸ் (பிளான்டேஷன்ஸ்) ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

மாநில அரசு சார்பாக
அரசு செயலர்,
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மகேஸ்வரி:

முன்னுரை:

1. சிறப்பு அனுமதி மூலமான இந்த மேல்முறையீட்டில், கூட்டாண்மை நிறுவனமான வாதி-மேல்முறையீட்டாளர், மு.பி.மே. எண்கள் *193/2002* மற்றும் *178/2003*-இன் *(உ.ப.ம. எண் 8947/2006* உடன்) பொதுத் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்துரைத்துள்ளது, இதில் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம், பிரதிவாதி-மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை அனுமதித்தும், வாதி-மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தும், உ.வ. எண் *561/1998*-இல் கற்றறிந்த தனியமர் நீதியரசரால் பிறப்பிக்கப்பட்ட *15.10.2001*-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை மாற்றியமைத்து, நட்டஈட்டினை வசூலிப்பதற்கான மேல்முறையீட்டாளரின் உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது.

1.1. நட்டஈட்டினை வசூலிப்பதற்கான மேற்சொன்ன உரிமை வழக்கிலிருந்து எழுகின்ற இவ்விடயம், மறுத்துரைக்கப்படாத பல உண்மையான சங்கதிகளையும், ஒருசில மறுத்துரைக்கப்படும் சங்கதிகளையும் வகைப்படுத்துவதோடு, பல்வேறு சுற்றுகளைக்கொண்ட அவ்வழக்குக்குரிய, தனிச்சிறப்பான மற்றும் பலவகைப்பட்ட வரலாற்றையும் கொண்டுள்ளது. இவ்வழக்குப்பொருளின் சுருக்கமான விவரங்களிலிருந்து, வாதி-மேல்முறையீட்டாளர் குறிப்பிடப்பட்ட நிலப்பகுதியைத்[1] தோப்புக்காகவும், அது தொடர்புடைய நோக்கங்களுக்காகவும் அதன் உரிமையாளரான நாங்குநேரி ஸ்ரீ நானமாமலை ஜீயர் மடத்திடமிருந்து[2] குத்தகைக்கு (முதலில் 1971-1972-ஆம் ஆண்டில் 5 ஆண்டு காலத்திற்கும், பின்னர், 1977-1978-ஆம் ஆண்டில் 25 ஆண்டு காலத்திற்கும்) எடுத்திருந்தது என்பதைக் காணலாம். வாதி-மேல்முறையீட்டாளரின் வழக்கு யாதெனில், தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட 6.3.1976-ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கையின்படி, பிரச்சினைக்குரிய நிலத்தை 1972-ஆம் ஆண்டு வன விலங்குகள் (பாதுகாப்புச்) சட்டத்தின்[3] கீழ் வன விலங்குகள் காப்பிடமாக சேர்க்கப்பட திட்டமிடப்பட்டதாகும், மேலும், இழப்பீடு தீர்வளிப்பதற்காக, சில கருத்துரைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டுவந்தன, இவர்கள், இழப்பீட்டை விரைந்து தீர்வுசெய்ய உயர் நீதிமன்றத்தின் கட்டளையின்படி நியமிக்கப்பட்டவர்களாவர்.

---

1. நாங்குநேரி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம் களக்காடு கிராமத்தில் புல எண்கள் 805/1, 805/3, 805/4, 806, 807, 808 மற்றும் 809 மற்றும் மலையடி புதூர் கிராமத்தில் புல எண் 495 இவையாவும் 197.36 ஏக்கர் பரப்பளவுடையதாகும். இதில் இதற்குப்பிறகு 'பிரச்சினைக்குரிய நிலம்' அல்லது 'வழக்கு நிலம்' எனக் குறிப்பிடப்படும்.

2. இதில் இதற்குப்பிறகு 'மடம்' எனக் குறிப்பிடப்படும்.

3. இதில் இதற்குப்பிறகு 'சட்டம்' அல்லது '1972-ஆம் ஆண்டு சட்டம்' எனக் குறிப்பிடப்படும்.

வாதி-மேல்முறையீட்டாளரின் மனக்குறை யாதெனில், ஒருபுறம் பிரச்சினைக்குரிய நிலம், வனவிலங்குகள் காப்பிடத்திற்காக கையகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதால் அதனைப் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை என்பதும், மறுபுறம் ஏதொரு தொகையும் இழப்பீடு வழங்கப்படவில்லை என்பதும், அதன்பின்னர், பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளர், *19.11.1993*-ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட உத்தரவின்வாயிலாக பிரச்சினைக்குரிய நிலத்தை மேற்படி வன விலங்குகள் காப்பிடத்தின் வரம்பிலிருந்து நீக்குவதற்கு விருப்பம் தெரிவித்தது என்பதுமாகும். வாதி-மேல்முறையீட்டாளரும், மடமும் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுவின் மூலமாக *19.11.1993*-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி உத்தரவை எதிர்த்துரைத்தன. அவ்வாறு மேல்முறையீட்டாளர் மற்றும் மடத்தால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை, உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர் *13.9.1995* அன்று அனுமதித்தார்; ஆனால், நீதியர் ஈராயம், அதனுடைய *18.9.1997*-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில், தனியமர் நீதியரசரால் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்து, பிரச்சினைக்குரிய அறிவிக்கையிலிருந்து திரும்பப்பெற மாநில அரசுக்குள்ள அதிகாரங்களை உறுதிசெய்யும் அதேவேளையில் நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்தது. நீதியர் ஈராயம், *'நீதிப்பேராணை மனுதாரர்களின் நட்டத்தினை மதிப்பிடுவதற்காக உரிய உரிமையியல் நடவடிக்கை எடுக்கும்'* வாய்ப்பினை அவர்களிடம் விட்டுவிட்டபோதிலும், அத்தகையதொரு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, *'இந்நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கினைத் தொடுத்திருந்த காலக்கட்டத்தை நீக்குவதற்காக காலவரையறைச் சட்டத்தின் வகையங்களைச் சார்ந்துநிற்கும் வாய்ப்பினையும் நீதிப்பேராணை மனுதாரர்களிடம் அளித்துவிட்டது'.* அதன்பிறகு, கையகப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட பிரச்சினைக்குரிய நிலத்தினைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கப்பட்டதாகக்

கூறியதற்காக, ஆண்டொன்றுக்கு 18% வட்டியுடன் சேர்த்து தொகை ரூ.1,31,95,000/- என்ற அளவுக்கு நட்டஈடு வசூலிக்குமாறு கோரி, வாதி-மேல்முறையீட்டாளர், பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதிர்ப்பிலுள்ள உரிமையியல் வழக்கைத் தொடுத்தார். வாதி, தொகை ரூ.86,88,000/-ஐ கைவரப்பெறும் வரையில் உரிமை வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 9% வட்டியுடன் சேர்த்து பெறுவதற்குரியவராவார் என்று தீர்மானித்து உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசர், 15.10.2001-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை வாயிலாக உரிமை வழக்கைப் பகுதியாக தீர்ப்பாணையிட்டார். ஆயினும், பிரதிவாதி-மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், வாதிக்கு நட்டஈடு ஏதும் தீர்வளிப்பதற்கான சூழ்நிலை ஏதும் காணப்படவில்லை என்றும், 26.2.2007-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான அதன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை வாயிலாக, கற்றறிந்த தனியமர் நீதியரசரின் தீர்ப்பாணையை மாற்றியமைத்து, உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்தது. எனவே, வாதி-மேல்முறையீட்டாளர் இம்மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

<u>தொடர்புடைய பின்புலமும், உண்மையான கருப்பொருளும்</u>

2. வழக்கின் தொடர்புடைய பின்புலமும், உண்மையான அம்சங்களும் பின்வருமாறு சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன:-

2.1. மேல்முறையீட்டாளரான ஒரு கூட்டாண்மை நிறுவனம், மொத்தமாக உள்ள 80 ஏக்கர் நிலத்தில் டீ, காபி மற்றும் ஏலக்காய் போன்ற வணிகப் பயிர்களைப் பயிரிடுவதற்காக உரிமையாளரான மடத்திடமிருந்து 197.36 ஏக்கர் பரப்பளவான பிரச்சினைக்குரிய நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருந்தது. பிரச்சினைக்குரிய நிலம்

15.11.1971 அன்று குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. ஆனால், இது தொடர்பாக 1.7.1972 முதல் 30.6.1977 வரையிலான 5 ஆண்டு காலத்திற்கு பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணம் 1.7.1972 அன்று மடத்தால் நிறைவேற்றப்பட்டதாக மேல்முறையீட்டாளர் கூறியுள்ளார்.

2.2. 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 18(1)-இன் கீழ் வெளியிடப்பட்ட 6.3.1976-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் 183-இன்படி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு வனப் பகுதியை, அங்குள்ள வன விலங்குகளைப் பாதுகாத்து வளர்ப்பதற்கான ஒரு காப்பிடமாக அறிவிக்கும் தலைமை வனக் காப்பாளரின் திட்டத்திற்கு தமிழ்நாடு மாநில அரசு அதன் அங்கீகாரத்தைத் தெரிவித்தது. மேல்முறையீட்டாளருக்கு குத்தகைக்கு விடப்பட்ட மேற்சொன்ன 197.36 ஏக்கர் நிலத்தையும் சேர்த்தே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

2.3. மேல்முறையீட்டாளர், மேற்படி 197.36 ஏக்கரிலிருந்து ஏற்கெனவே பயிரிடப்பட்டிருந்த 80 ஏக்கர் நீங்கலாக, 10 ஏக்கர் நிலத்திலுள்ள மரங்கள் முழுவதையும் வெட்டுவதற்காக 23.3.1975 அன்றும், 17.9.1976 அன்றும் விண்ணப்பித்திருந்தார். எனினும், மாவட்ட ஆட்சியர், தனது 16.11.1976-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக பிரச்சினைக்குரிய நிலம், வன விலங்குகள் காப்பிடத்திற்காக மேற்படி அறிவிக்கையின்கீழ் எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது என்றும், மரங்களை வெட்டுவது அவ்விடத்திலுள்ள மண்வளம் மற்றும் ஈரப்பதத்தின் அளவுகளைப் பாதிக்கலாம் என்றும் காரணங்கள் கூறி மேல்முறையீட்டாளருக்கு அந்த அனுமதியை வழங்க மறுத்துவிட்டார்.

2.4. அதன்பிறகு, 14.7.1977 அன்று, மாவட்ட ஆட்சியர் காப்பிடத்தின் எல்லைகளைக் குறிப்பிட்டும், கோரிக்கை தாக்கல் செய்ய ஏதும் உரிமையுள்ள நபர்

எவரும், 1975-ஆம் ஆண்டு வன விலங்குகள் பாதுகாப்பு (தமிழ்நாடு) விதிகளின்[4] கீழ் படிவ எண் 8-இல் கோரவும் 1972-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 21-இன் கீழ் அரசுப் பொது அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். பிரச்சினைக்குரிய நிலம், 14.7.1977-ஆம் தேதியிடப்பட்ட இந்த அரசுப் பொது அறிவிப்பில் சேர்க்கப்படவில்லையென்று மேல்முறையீட்டாளர் பணிந்துரைத்தது.

2.5. பிரச்சினைக்குரிய நிலம், 14.7.1977-ஆம் தேதியிடப்பட்ட அரசுப் பொது அறிவிப்பில் சேர்க்கப்படவில்லை என்றும், மேலும், 1.7.1972-ஆம் தேதியிடப்பட்ட மேற்சொன்ன குத்தகை ஆவணத்தின்படி குத்தகைக் காலம் 30.6.1977 அன்று காலாவதியாகிவிட்டது என்கிறபோது, மேல்முறையீட்டாளர் சிறந்தமுறையில் பயிரிட்டு வளர்ப்பதற்காக, அவர் சார்பாக நீண்ட கால குத்தகையை நிறைவேற்ற மடத்திடம் கோரப்பட்டது என மேல்முறையீட்டாளர் பணிந்துரைத்தது. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, 20.3.1978 அன்று மடம், மாவட்ட ஆட்சியரிடம் கலந்தாலோசித்தப் பின்னர், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் அனுமதியைப் பெற்றபிறகு 25 ஆண்டு காலத்திற்கு (1.7.1977 முதல் 30.6.2002 வரை) அதன்சார்பாக பிரச்சினைக்குரிய நிலத்திற்கு புதிதாக நீண்ட கால குத்தகையை வழங்கியது என்பதாகும். நாம், மேற்படி ஆணையரின் குறிப்பிடப்பட்ட அனுமதி தொடர்பான பிரச்சினையை இதில் இதற்குப்பிறகு சிறிது நேரங்கழித்து குறிப்பிடலாம்.

2.6. கருப்பொருளான சங்கதியைத் தொடர்ந்து, 1975-ஆம் ஆண்டு விதிகளின் கீழ் இரு மாதங்களுக்குள் எழுத்துப்பூர்வ கோரிக்கையைத் தாக்கல் செய்ய அதன்கீழ் உள்ளடங்கியுள்ள நிலத்தில் அல்லது அதன்மீது உரிமை ஏதும் கோரும் நபர்களை

---

4. இதில் இதற்குப்பிறகு '1975-ஆம் ஆண்டு விதிகள்' எனக் குறிப்பிடப்படும்.

வரவழைத்து, பிரிவு 21-இன் கீழ் மாவட்ட ஆட்சியர் 28.8.1978 அன்று மற்றொரு அரசுப் பொது அறிவிப்பை வெளியிட்டார். ஆட்சியர், 31.8.1978 அன்று, 14.7.1977-ஆம் தேதியிடப்பட்ட முந்தைய அறிவிக்கை இரத்து செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்தும், தமிழ்மொழியில் அதே அரசுப் பொது அறிவிப்பை வெளியிட்டார். மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, 1978-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்புகளின் கீழ்தான் திட்டமிடப்பட்ட காப்பிடத்திற்குள் பிரச்சினைக்குரிய நிலமும் சேர்க்கப்படவேண்டியதாயிற்று என்பதாகும்.

2.7. மேற்சொன்ன அறிவிக்கைகளுக்குப் பிறகு, ஒருபுறம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கடித பரிமாற்றங்களும் நடந்துகொண்டிருக்கையில், மேல்முறையீட்டாளரும், மடமும் திட்டமிடப்பட்ட காப்பிடத்திலிருந்து வழக்கு நிலத்தை நீக்குவதற்கு பல முயற்சிகள் மேற்கொண்டும், மறுபுறம் 24.6.1984 அன்று மேல்முறையீட்டாளர் தீர்வளிப்பு விசாரணையில், ரூ.41,36,866/- என்ற அளவுக்கு நட்டஈடு கோரி, 1975-ஆம் ஆண்டு விதிகளின் கீழ் படிவ எண் 8-இல் கோரிக்கையுடன் எதிர்வழக்குரையைத் தாக்கல் செய்தது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், நட்டஈட்டுத் தொகையை மதிப்பிடும்பொருட்டு துறைக்குள்ளான பல்வேறு கடிதப் போக்குவரத்தைப் பரிமாறிக்கொண்டனர். இதில் இந்த நடவடிக்கைகள் மற்றும் கடிதங்கள் யாவற்றையும் விரிவாகக் கூறவேண்டியதில்லையென்றாலும், பிரச்சினைக்குரிய ஏலக்காய் தோட்ட நிலம், வன விலங்குகள் காப்பிடம் அமைக்கும் நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட வேண்டியிருந்தது என்ற காரணத்தின்பேரில், அந்நிலத்தைப் பதிவுசெய்வதற்காக மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஆட்சியர் 1.8.1985 அன்று நிராகரித்தார். அதன்பிறகு, மடத்திற்குச் சொந்தமான நிலத்துக்கான நட்டஈடு, ஆறுதல் தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து, ரூ.72,98,661/- என மதிப்பிடப்பட்டது என்று

தெரிவித்து ஆட்சியர் *23.3.1990* அன்று நில நிருவாக சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். மேற்படி சிறப்பு ஆணையர் மொத்த மதிப்பீட்டு நட்டஈட்டை ரூ.*65,06,453*/- எனக் குறைத்து, *3.12.1990* அன்று *1894*-ஆம் ஆண்டு நில கையகப்படுத்துதல் சட்டத்தின்[5] தொடர்புடைய வகையங்கள் இவ்வழக்குக்கு பொருந்துவது குறித்த உரிய ஆணை பிறப்பிக்க அரசைக் கேட்டுக்கொண்டார். மேலும், இதனுடன், *5.3.1991* அன்று, பிரச்சினைக்குரிய நிலம் தொடர்பாக செய்யப்படும் தீர்வளிப்பு தொடர்புடைய எதிர்பார்க்கப்படும் வட்டி செலுத்தும் பொறுப்புரிமை குறித்து சம்பந்தப்பட்ட அரசு செயலாளருக்கு, முதன்மை தலைமை வனக் காப்பாளர் தகவல் தெரிவித்தார்.

2.8. மேற்கூறிய நடவடிக்கைகள் நிலுவையிலிருக்கையில், தீர்வளிப்பு ஏதும் அளிக்காததால், பிரச்சினைக்குரிய நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான திட்டத்தை உயர் நீதிமன்றம் முன்பாக நீதிப்பேராணை மனு *(நீ.பே.ம. எண் 685/1991)* வாயிலாக மடம் எதிர்த்துரைக்க விரும்பியது. தற்போதைய மேல்முறையீட்டாளர் அந்த நீதிப்பேராணை மனுவில் நான்காவது எதிர்மனுதாரராக வரிசைபடுத்தப்பட்டார். *'மாநில அரசு, மேற்படி சட்டத்தின் பிரிவு 18-இன் கீழ் வெளியிடுவதற்கான தேவைப்பாடு குறித்து அதன் சிந்தையைச்செலுத்தி, மையச் சட்டம் 53/1972-இன் பிரிவு 18-இன் கீழ் பிரச்சினைக்குரிய வெளியீடு செல்லத்தக்கது'* என்றும், அது செயற்படுத்தப்பட்டது என்றும், *'காப்பிடத்தின் எல்லையிலிருந்து மனுதாரரின் நிலங்களை விலக்குவது சாத்தியமற்றது என்றும், இது காப்பிடம் உருவாக்கப்படுவதற்கான நோக்கத்தையே சிதைத்துவிடும் என்றும் கண்டறிந்தது'* என எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசு

---

5. இதில் இதற்குப்பிறகு *'1894*-ஆம் ஆண்டு சட்டம்' எனக் குறிப்பிடப்படும்.

மேற்படி நீதிப்பேராணை மனுவில் தனது எதிராணையுறுதியாவணத்தில் மற்றவற்றுக்கிடையில் தெரிவித்தது.

2.9. ஆயினும், 1894-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 11-அ பிரச்சினைக்குரிய நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது. மேலும், ஏமாற்றமளிக்கின்ற நட்டஈடு தீர்வளிக்கப்பட்டால், நீதிப்பேராணை மனுதாரர் அதனை எதிர்த்துரைக்கும் உரிமை கொண்டிருத்தல்வேண்டும் என்ற கருத்துரைகளோடு, மடத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி நீதிப்பேராணை மனு மற்றவற்றுக்கிடையில் உயர் நீதிமன்ற கற்றறிந்த தனியமர் நீதியரசரால் 13.7.1991 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மடம், நீதிமன்றத்துக்குள்ளான மேல்முறையீட்டைத் தாக்கல் செய்திருந்தாலும், நட்டஈடு தீர்வளிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த ஆட்சியருக்கு பணித்திருப்பதோடு, அது திரும்பப்பெறப்பட்டதாகக் கூறி 20.1.1992 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

2.10. அதன்பிறகு, 9.3.1992 அன்று, 1894-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவுகள் 9(3) மற்றும் 10-இன் கீழ் ஆட்சியரால் தீர்வளிப்பு விசாரணைக்கான ஒரு புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கு பதிலளிக்கும்வகையில், மடம் ரூ.92,81,346/- என்ற அளவுக்கு நட்டஈடு கோரி ஒரு கடிதத்தை அனுப்பியது. அதற்குமாறாக, மேல்முறையீட்டாளர், காபி, ஏலக்காய் மற்றும் டீ போன்ற பயிர்களின் சந்தை மதிப்பாக ரூ.1,09,60,000/-ம்; எதிர்நோக்கப்படும் ஏலக்காய் வளர்ச்சிக்காக ரூ.96,00,000/-ம்; கட்டப்படவேண்டிய கட்டிடத்துக்கான செலவுத்தொகையாக மற்றொரு ரூ.96,400/-ம் நட்டஈடாகக் கோரி ஒரு விவர உரையை 30.3.1992 அன்று தாக்கல் செய்தது என எடுத்துரைக்கப்பட்ட வாதங்களிலிருந்து தெரியவருகிறது. மேல்முறையீட்டாளர், மேலும் 30% ஆறுதல்தொகையும், அறிவிப்பு நாளிலிருந்து தீர்வளிப்பு நாள்வரையில்

ஆண்டொன்றுக்கு 12% வட்டியும், மொத்த நட்டஈட்டுத் தொகையில் ஆண்டொன்றுக்கு 15% வருங்கால வட்டியும் கோரியது.

2.11. 16.4.1992 அன்று தீர்வளிப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு, ஒரு வரைவு தீர்வளிப்பு தனி ஆணையருக்கு மாவட்ட வருவாய் அலுவரால் அனுப்பப்பட்டது. இருப்பினும், எதிர்மேல்முறையீட்டாளர், தீர்வளிப்பு பெறுவதற்காக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்காததால், மற்றொரு நீதிப்பேராணை மனுவான நீ.பே.ம. எண் 6931/1993, தீர்வளிப்பை விரைந்து பெறுவதற்கான உத்தரவுகளைக் கோரி, மடத்தாலும், மேல்முறையீட்டாளராலும் கூட்டாகத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிப்பேராணை மனு, உத்தரவு பெற்ற நாளிலிருந்து[6] நான்கு வார காலத்திற்குள் தீர்வளிப்புக்கான உத்தரவுகளுடன் 11.8.1993 அன்று கற்றறிந்த உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசரால் தீர்வுசெய்யப்பட்டது.

2.12. 11.8.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்சொன்ன உத்தரவினைப் பிறப்பித்த பிறகு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இவ்வழக்கு பரிசீலிக்கப்பட்டிருக்கிறபோது, பிரச்சினைக்குரிய நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு அதிக செலவு ஏற்படும் என்பதையும், பிரச்சினைக்குரிய நிலத்தைக் கையகப்படுத்துவது அவசியமில்லை

---

6. கற்றிந்த தனியமர் நீதியரசர், 11.8.1993-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவில் பணித்ததாவது:

> "எனவே 20.6.1990 மற்றும் 12.9.1990-ஆம் தேதியிடப்பட்ட ஆட்சியர் அலுவலகப் பார்வைக் குறிப்பு கே.2/1498/83-இல் அனுப்பப்பட்டு, சிறப்பு நிருவாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் திட்டங்களையும், 10.7.92-ஆம் தேதியிடப்பட்ட 2-ஆம் மனுதாரரின் முறையீடுகளையும், 19.10.1992-ஆம் தேதியிடப்பட்ட 1-ஆம் மனுதாரரின் முறையீடுகளையும், மேற்கொண்டு 1-ஆம் மனுதாரர் முறையீடுகள் ஏதும் அளிப்பின் அவற்றையும், இதிலுள்ள 2-ஆம் எதிர்மனுதாரரான திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவுரையையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உரிய அதிகாரியான நில நிருவாக சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரை நான் உத்தரவிடுகிறேன்."

என்பதையும் கருத்திற்கொண்டு, அத்திட்டத்தைக் கைவிடலாம் என தலைமை வனக் காப்பாளர் (வ.வி.) மற்றும் தலைமை வன விலங்கு பாதுகாவலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இச்சங்கதிகளைக் குறிப்பிட்டு, நில நிருவாக ஆணையர், ஆட்சியருக்கு உரிய ஆணைகளைப் பிறப்பிப்பதற்கேதுவாக மேற்கொண்டு ஆறு வார கால அவகாசம் கோரி, 21.9.1993 அன்று உயர் நீதிமன்றம் முன்பு எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார். அத்தகைய ஒரு விண்ணப்பத்தின்பேரில் உயர் நீதிமன்றம், 26.10.1993-ஆம் தேதியிடப்பட்ட அதன் உத்தரவின் வாயிலாக தீர்வளிப்பதற்கான காலத்தை நீட்டித்தது.

2.13. அதன்பிறகு, 19.11.1993 அன்று, 1972-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 24-இன் உட்பிரிவு (2)-இன் கூறு (அ)-இன் கீழான அதிகாரங்களைக் குறிப்பிடப்பட்டவகையில் வேண்டுரைத்து, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், வன விலங்குகள் காப்பிடத்தின் எல்லைகளிலிருந்து பிரச்சினைக்குரிய நிலத்தை நீக்கிவிட்டார். இவ்வுத்தரவு, பிரச்சினைக்குரிய நிலத்தைக் கையகப்படுத்தும் திட்டத்தைக் கைவிடும் விளைவைக் கொண்டிருந்தது, ஆதலால், இது நட்டஈட்டை தீர்வளிப்பதற்குரிய அவசியத்திற்கு முடிவுகட்டியது.

2.14. திருநெல்வேலி ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட மேற்சொன்ன 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட ஆணை, இவ்வழக்கின் வாதப்பொருளாக இருந்தது. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, ஆட்சியர், பிரச்சினைக்குரிய நிலத்தைக் கையகப்படுத்த ஏற்கெனவே முடிவு எடுத்திருந்தாலும், நட்டஈடு செலுத்தப்படவேண்டும், மேலும், உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை வளைக்கும்பொருட்டே 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி ஆணையைப் பிறப்பிக்க ஆட்சியருக்கு அதிகாரிகள் கட்டளையிட்டனர் என்பதாகும். சிறப்பு ஆணையருக்கு, வனத்துறை

துணைச் செயலாளரால் அனுப்பப்பட்ட 12.11.1993-ஆம் தேதியிட்ட கடிதத்தை மேல்முறையீட்டாளர் குறிப்பாக குறிப்பிட்டுள்ளார், இதில் திட்டமிடப்பட்ட வன விலங்குகள் காப்பிடத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கு பெருந்தொகை செலவிடப்பட இயலாது என்றும், இக்கையகப்படுத்துதல் முன்னுரிமையின் அடிப்படையில் செய்யப்பட வேண்டியதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. 12.11.1993-ஆம் தேதியிடப்பட்ட இக்கடிதத்தைத் தொடர்ந்து, 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 24-இன் உட்பிரிவு (2)-இன் கூறு (அ)-இன் கீழ் திட்டமிடப்பட்ட காப்பிடத்தின் வரம்பிலிருந்து பிரச்சினைக்குரிய நிலத்தை நீக்குவதற்கு, திருநெல்வேலி ஆட்சியருக்கு 17.11.1993-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தை சிறப்பு ஆணையர் அனுப்பினார்; ஆதலால் ஆட்சியர், 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட கேள்விக்குள்ளான ஆணையைப் பிறப்பித்தார்.

2.15. 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி உத்தரவு, நீ.பே.ம. எண் 21721/1993 என்ற நீதிப்பேராணை மனுவின் வாயிலாக உயர் நீதிமன்றத்தில் மடத்தாலும், மேல்முறையீட்டாளராலும் கூட்டாக எதிர்க்கப்பட்டது. தற்போதைய மேல்முறையீட்டாளரும், உயர் நீதிமன்றத்தால் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைக் கீழ்ப்படியாததற்கு முறையிட்டு, ஓர் அவமதிப்பு மனு (எண் 340/1994)-ஐயும் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்ற தனியமர் நீதியரசர் 13.9.1995 அன்று நீதிப்பேராணை மனுவை அனுமதித்து, 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி உத்தரவை நீக்கி, மேலும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அவமதிப்பு என்ற குற்றம் புரிந்துள்ளதால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.1000/-ஐ அபராதமாக விதித்தார். இருப்பினும், கற்றறிந்த தனியமர் நீதியரசரால் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, நீ.பே.மே. எண் 1041/1995 என்ற நீதிமன்றத்திற்குள்ளான மேல்முறையீட்டின் வாயிலாக எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது, நட்டஈட்டினை வசூலிப்பதற்காக

நீதிப்பேராணை மனுதாரர்கள் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகும் வாய்ப்பினை அவர்களிடம் விட்டுவிடும் அதேவேளையில், எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசுக்கு எதிராக பல குறிப்புரைகளையும், கருத்துரைகளையும் தெரிவித்து உயர் நீதிமன்ற நீதியர் ஈராயத்தால் 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட அதன் தீர்ப்புரையின் வாயிலாக அது அனுமதிக்கப்பட்டது.

2.16. 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையில் நீதியர் ஈராயத்தால் தெரிவிக்கப்பட்ட கருத்துரைகள், இம்மேல்முறையீட்டுக்கு வழிகோலிய உரிமையியல் வழக்கில் மேல்முறையீட்டாளரால் கோரப்பட்ட கோரிக்கையின் அடிப்படையிலானதாகும். இம்மேல்முறையீட்டின் வழக்குப்பொருளையும், அதிலுள்ள பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டுபார்த்தால், 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையிலுள்ள கருத்துரை-களிலிருந்தும், காண்முடிவுகளிலிருந்தும் தேவைப்படும் விவரங்கள் குறிப்பெடுத்துக்-கொள்ளத்தக்கவையாகும்.

2.16.1. ஆட்சியர், பிரச்சினைக்குரிய நிலத்தைக் கையகப்படுத்தி, இழப்பீடளிக்க ஏற்கெனவே முடிவெடுத்துவிட்டபோது, அங்கு 1972-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 24-இல் உட்பிரிவு (2)-இன் கூறு (அ)-இன் கீழ் அதிகாரத்தைச் செலுத்தும் வாய்ப்பில்லை என நீதியர் ஈராயம் முதலில் 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையில் கருத்துரைத்தது. 1894-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 48-இன்படி நடவடிக்கையைத் திரும்பப்பெறுவது நிலைநிறுத்தப்படக்கூடியது என்ற அரசு வழக்குரைஞரின் வாதத்தையும் நீதியர் ஈராயம் நிராகரித்தது. எனினும், பொது வகையங்கள் சட்டம், 1897[7]-இன் பிரிவு 21

---

7. இதில் இதற்குப்பிறகு 'பொது வகையங்கள் சட்டம்' எனக் குறிப்பிடப்படும்.

பொருந்தத்தக்கது என்றும், இதில் உதவிபுரிவதற்கு அரசால் அழைக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதாக நீதியர் ஈராயம் கருத்துத் தெரிவித்தது. ஆயினும், இது தொடர்பாகவும், பிரச்சினைக்குரிய திட்டத்தை உருவாக்கி, காலங்கடந்த நிலையில் அதிலிருந்து பின்வாங்கிய அரசு அதிகாரிகளின் ஒட்டுமொத்த செயலும் முன்னாராயாது, மனப்போக்காக, அக்கறையின்றி செய்யப்பட்டதாகும் என நீதியர் ஈராயம் கருத்துரைத்தது.

2.16.2. எதிர்ப்புக்குள்ளான நடவடிக்கைகள் முன்னாராயாமல் எடுக்கப்பட்டிருந்தன என்றும், அத்தகைய குறிப்புரைகளைச் செய்தாலுங்கூட கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறைவேற்றி, காப்பிடமாக கூறப்பட்ட திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த அரசை வற்புறுத்துவதற்கு, மேல்முறையீட்டாளருக்கும், மடத்திற்கும் உரிமை ஏதுமில்லை என உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம் கருத்துரைத்தது. அத்தகைய குறிப்புரைகளையும், கருத்துரைகளையும் தெரிவித்த பிறகு, *1894*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் அறிவிக்கையைத் திரும்பப்பெறுவதற்கும், தீர்வளிப்பை மறுப்பதற்கும் அரசுக்குள்ள அதிகாரத்தை நீதியர் ஈராயம் ஒப்புக்கொண்டது. ஆயினும், மடத்துக்கும், மேல்முறையீட்டாளர்களுக்கும் நட்டஈடு கோருவதற்கு ஒரு செல்லத்தக்க வழக்கு இருந்தது என்றாலும், இது தொடர்பாக நட்டத்தால் பாதிக்கப்பட்டதை நீதிமன்றத்தில் மெய்ப்பித்திருக்கவேண்டும் எனக் கருத்துரைக்கவும் நீதியர் ஈராயம் விழைந்தது. ஆதலால், நட்டத்தின் அளவை மதிப்பிடுவதற்கான உரிய உரிமையியல் நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு மடத்திடமும், மேல்முறையீட்டாளரிடமும் விடப்பட்டது. அவர்கள்,

உயர் நீதிமன்றத்தில்[8] வழக்கினை நடத்திய காலத்தை நீக்கக் கோருவதற்கான விருப்பத்தையும் நீதியர் ஈராயம் அவர்களிடமே விட்டுவிட்டது.

2.16.3. உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், மேற்குறிப்பிட்ட கருத்துரைகள் மற்றும் காண்முடிவுகளுடன், திட்டமிடப்பட்ட காப்பிடத்தின் வரம்பிலிருந்து பிரச்சினைக்குரிய நிலத்தை நீக்கும் அரசின் முடிவு, பொது வகையங்கள் சட்டம், பிரிவு *21*-இன்படி நிலைநிறுத்தத்தக்கது என முடிவுகண்டது, மேலும், மேல்முறையீட்டை அனுமதிக்கையில், தற்போதைய மேல்முறையீட்டாளர் உள்ளிட்ட நீதிப்பேராணை மனுதாரர்கள், தங்களுடைய

---

8. உயர் நீதிமன்ற நீதியர் ஈராயத்தின் இக்கருத்துரைகள் கீழ்க்கண்டவாறு:-

> *"20.* அரசு குற்றமற்றது என்று நாங்கள் கூறுவதற்கில்லை. அதற்குமாறாக, அரசு, பிரிவு *18*-இன் கீழ் அறிவிக்கை இட்டநிலையிலும், அறிவிக்கையிலிருந்து பின்வாங்கிய நிலையிலும் முன்னாராயாது செயல்பட்டுவிட்டது. அரசு, பிரிவு *18*-இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டதிலும், தீர்வளித்ததில் மட்டுமீறிய தாமதம் புரிந்து, இறுதியாக அறிவிக்கையிலிருந்து பின்வாங்கியதிலுமான தன்னுடைய செயல்களுக்கான பின்விளைவுகளைச் சந்தித்தே தீரவேண்டும். ஆனால் அரசு புரிந்த செயலாலும், தவறாலும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஏற்பட்ட நட்டம் நீதிமன்றத்தில் மெய்ப்பிக்கப்படவேண்டியுள்ளது. அரசின் செயல்களுக்கும், தவறுகளுக்கும் அதனை எதிர்க்க எதிர்மேல்முறையீட்டாளர்களிடம் நேர்மையான வழக்கு இருந்தது என்பதில் ஐயமில்லை. கேள்வி என்னவென்றால், எதிர்மேல்முறையீட்டாளர்களுக்குள்ள உள்ளபடியான பரிகாரம் எது? என்பதேயாகும். உரிமை உண்டெனில், தீர்வழி உண்டு (Ubi jus ibi remedium) என்ற முதுமொழி, தற்போதைய வழக்கின் சங்கதிகளின்பேரில் பொருந்தத்தக்கது என்பதில் ஐயமில்லை. ஆனால், எதிர்மேல்முறையீட்டாளர்களின் பரிகாரம் எங்காவது கிடைக்கும் என்பதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். கையகப்படுத்துதல் நடவடிக்கைகளை நிறைவுசெய்து, காப்பிடமாக அறிவிக்கப்பட்ட திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த அரசை வற்புறுத்த அவர்களுக்கு உரிமையேதுமில்லை. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், அறிவிக்கையிலிருந்து பின்வாங்கிய அரசின் அதிகாரத்தை ஒப்புக்கொள்வதோடு, நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் தீர்வளிக்க மறுக்கிறோம். எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை மதிப்பிடுவதற்கான உரிய உரிமையியல் நடவடிக்கை எடுப்பது அவர்களின் விருப்பத்திற்குரியது எனவும், மேலும் இதற்காக, அவர்கள் இந்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்த காலத்தை விலக்குவதற்காக காலவரையறைச் சட்டத்தின் வகையங்களின் மீது சார்ந்துநிற்க நிச்சமாக அவர்களுக்கு வாய்ப்புள்ளது எனவும் நாங்கள் கருதுகிறோம்."

உரிமைகளை உரிய நீதிமன்றத்தில் விவாதிப்பதை அவர்களின் விருப்பத்திற்குவிட்டு, நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்யவிழைந்தது. இம்முடிவினைக் கருத்திற்கொண்டு, அவமதிப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன[9].

2.17. இதன் பின்னணியிலுள்ள காலவரிசைப்படியான விடயங்களை நிறைவு செய்யும்பொருட்டு, *18.9.1997*-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி தீர்ப்புரைக்கு எதிராக

---

9. வழக்கின் அடிப்படையில் நீதியர் ஈராயம் பின்வருமாறு முடிவுசெய்தது:-

> *"23. .....12.11.1993*-ஆம் தேதியிடப்பட்ட கடித எண் நிலை எண் இ.டி.எப். *377*-இல் அரசின் கடிதத்தையும், அதனைத் தொடர்ந்து சிறப்பு ஆணையரின் ஆணையையும் காப்பிடத்தில் எதிர்மேல்முறையீட்டாளர்களின் நிலங்களைச் சேர்த்ததைத் திரும்பப்பெறும் அரசின் முடிவு மற்றும் அதனைத் தொடர்ந்து மேற்படி நிலங்களைக் கையகப்படுத்துதல் கொண்ட *17.10.1993*-ஆம் தேதியிடப்பட்ட ஆர்.ஓ.சி. எண் உறச்.*2/34854/92*-இல் நில நிருவாக ஆணையரின் ஆணையையும் கருத்திற்கொண்டிருக்கிறோம். மேற்படி இரு கடிதங்களிலும், அரசு, அறிவிப்பிலிருந்தும், அதனைத் தொடர்ந்து கையகப்படுத்துதலிலிருந்தும் பின்வாங்கும் உறுதியான முடிவெடுத்திருந்தது என்று தீர்மானிப்பதில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு *226*-இன் கீழ் எங்களுடைய விருப்புரிமை அதிகாரங்களைச் செலுத்திவருகிறோம். ஆகவே, *19.11.1993*-ஆம் தேதியிடப்பட்ட ஆட்சியரின் ஆணை, அரசின் கட்டளைகளை மட்டுமே பின்பற்றுவதால், அதனை வேறேதேனும் நோக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை. திருத்தப்படாத வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு *18*-இன் கீழ் மாநில அரசால் அறிவிக்கையும், விளம்புகையும் வெளியிடப்பட்டதால், பொது வகையங்கள் சட்டத்தின் பிரிவு *21*-இன் கீழான அதிகாரத்தை வேண்டுரைத்து, அறிவிக்கையை அரசு மட்டுமே மாற்றவோ, இரத்து செய்யவோ இயலும். விடயத்தின் இக்கருத்தினைக் கருத்திற்கொண்டே, அரசின் சரிநுட்பமான ஆணையின்படியாகவும், அதிகாரங்களுக்குள்ளாகவும் திட்டமிடப்பட்ட காப்பிடத்தின் வரம்புகளிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளர்களுக்குச் சொந்தமான *197.36* ஏக்கர் நிலங்களையும், மற்றொரு *148.55* ஏக்கர் பரப்பளவினையும் நீக்கும் அரசின் முடிவினை நாங்கள் உறுதிசெய்கிறோம். அதன்விளைவாக, நீ.பே.ம. எண் *21721/ 1993*-இல் கோரப்பட்ட வேண்டுரை வழங்கப்பட இயலாது, மேலும் நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும். எதிர்மேல்முறையீட்டாளர்கள் உரிய நீதிமன்றத்தில் தங்களுக்குரிய உரிமைகளை விவாதித்துக்கொள்ளும் வாய்ப்பினை அவர்களிடமே விட்டுவிட்டு மேற்படி முறையில் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. அவமதிப்பு மேல்முறையீடு எண் *6/1995*-ம் அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை."*

இந்நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையிடுவதற்கு, சிறப்பு அனுமதிக்கான ஒரு மனுவை தற்போதைய மேல்முறையீட்டாளர் மட்டுமே தாக்கல் செய்தார், அது எடுத்தயெடுப்பிலேயே 23.2.1998 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

2.18. 23.2.1998 அன்று இந்நீதிமன்றத்தால் மேல்முறையீட்டுக்கான சிறப்பு அனுமதி மனுவின் தள்ளுபடியுடன் மேற்கூறிய வழக்கின் முடிவுக்குப் பிறகே மேல்முறையீட்டாளர், நட்டஈடு வசூலிப்பதற்காக உரிமையியல் நீதிமன்றத்தில் நடவடிக்கை மேற்கொண்டது.

2.19. நட்டுஈடு வசூலிப்பதற்கான நடவடிக்கைத் தொடர்பான சங்கதிகளையும், நிகழ்வுகளையும் விரிவாகக் கூறுவதற்குமுன், முந்தைய பத்திகளில் காணப்படும் சங்கதிகளையும், அம்சங்களையும் சுருங்கக்கூறுவது உகந்ததாக இருக்கும். சுருக்கமாகக் கூறினால், வழக்கின் சாரம் யாதெனில், மடத்திடமிருந்து குத்தகையின்பேரில் வாதி-மேல்முறையீட்டாளரால் எடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் பிரச்சினைக்குரிய நிலம், 6.3.1976-ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கையின்படி வன விலங்குகளுக்கான காப்பிடத்தில் சேர்க்கப்படவேண்டுமென திட்டமிடப்பட்டது; பிரச்சினைக்குரிய நிலத்தைக் காப்பிடத்திலிருந்து விலக்களித்துப்பெற மடம் மற்றும் மேல்முறையீட்டாளரின் தரப்பிலான முயற்சிகள் வெற்றியடையவில்லை. மிகவிரைந்து தீர்வளிப்பை முடிவு செய்ய உயர் நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டிருந்த தொடர்புடைய அதிகாரிகளால் வழக்கு நிலத்தைக் கையகப்படுத்தியதற்கான இழப்பீட்டைத் தீர்வளிப்பது தொடர்பான வழக்கு பரிசீலிக்கப்பட்டபோதிலும், ஏதும் தீர்வளிப்பதற்கு பதிலாக, ஆட்சியர் வன விலங்குகள் காப்பிட வரம்பிலிருந்து பிரச்சினைக்குரிய நிலத்தைநீக்கி, 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட ஆணையை வெளியிட்டார்.

வன விலங்குகள் காப்பிட வரம்பிலிருந்து வழக்கு நிலத்தை அவ்வாறு நீக்கியதற்கான அறுதியுரையால் மடமும், மேல்முறையீட்டாளரும் தற்போது மனக்குறையுற்று, 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட அவ்வுத்தரவுக்கு எதிராக நீதிப்பேராணை மனுவின் வாயிலாக மீண்டும் உயர் நீதிமன்றத்தை அணுகியது. மடத்தாலும், மேல்முறையீட்டாளராலும் அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை 13.9.1995 அன்று உயர் நீதிமன்ற கற்றறிந்த தனியமர் நீதியரசர் அனுமதித்தார். எனினும், மடமும், மேல்முறையீட்டாளரும் நட்டஈட்டுக்கான தங்களது கோரிக்கைக்கு உரிய நீதிமன்றத்தை அணுகவேண்டியது அவர்களின் விருப்பத்திற்குட்பட்டது எனக் கூறி, கற்றறிந்த தனியமர் நீதியரசரால் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீதியர் ஈராயம், தன்னுடைய 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையில் அங்கீகரிக்காமல் நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்தது.

<u>நட்டஈட்டை வசூலிப்பதற்கான உரிமையியல் வழக்கு</u>

3. 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்சொன்ன உத்தரவை நீக்கக்கோரி செய்த முயற்சியில் மேல்முறையீட்டாளர் தோல்வியடைந்தபோதிலும், உயர் நீதிமன்ற நீதியர் ஈராயத்தால் 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட அதன் தீர்ப்புரையில் சொல்லப்பட்ட கருத்துரைகளின் தொடர்பாகவும், தன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாகவும் அது, எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசிடமிருந்து நட்டஈடு கோரிக்கைக்கான நடவடிக்கையை எடுத்தது. இது தொடர்பாக, மேல்முறையீட்டாளர் 1.3.1998 அன்று உரிமையியல் விசாரணைமுறைச் சட்டப்பிரிவு 80-இன் கீழ் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார், அதற்கு எந்த பதிலும் எழவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர் 8.6.1998 அன்று நட்டஈட்டை வசூலிப்பதற்கான உரிமையியல் வழக்கைத் தொடுத்தார். இந்த

உரிமையியல் வழக்கு, இதில் இதற்குமேலே குறிப்பிடப்பட்ட சங்கதிகளின்பேரிலும், 1976-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிய நடவடிக்கைகளின் முதல் நாளிலிருந்து, அவை 1993-ஆம் ஆண்டில் கைவிடப்படும் வரையில், பிரச்சினைக்குரிய நிலத்தைப் பயன்படுத்துவதிலிருந்து மேல்முறையீட்டாளர் தடைசெய்யப்பட்டார் என்றும், 1993-ஆம் ஆண்டிலிருந்து 18.9.1997 வரையில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலிருப்பதன் காரணமாக, மேல்முறையீட்டாளர் நட்டஈட்டுக்கான உரிமை வழக்கைத் தாக்கல் செய்யவில்லை என்றுமான காரணங்களின் அடிப்படையிலும் அமைந்ததாகும். உயர் நீதிமன்ற நீதியர் ஈராயத்தால் குறிப்பிடப்பட்ட உரிமைகளையும், கொடுக்கப்பட்ட தன்னுரிமையையும் கருத்திற்கொண்டுபார்த்தால், உரிமை வழக்கு நிலைக்கத்தக்கது என்றும் காலவரையறையால் தடைசெய்யப்படவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

3.1. நட்டஈட்டுத் தொகையையும், அளவையும் பொறுத்தவரையில், அந்தக் குறிப்பிட்ட நிலத்திற்கான தீர்வளிப்பு விசாரணையில் கணக்கிடப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு வருமான இழப்பாக ரூ.2.31 இலட்சம் எனச் சொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். மேல்முறையீட்டாளர் ஆண்டொன்றுக்கு 18% வட்டியை கோரியதுடன் மேற்கொண்டு மறுநடவு மற்றும் பேணிவளர்க்கும் செயல்பாடுகளுக்கான செலவையும், பலன்தரும் பயிர்களாக எடுத்துக்கொள்ளக் கூடியவற்றுக்கு 3 ஆண்டுகளுக்கான இலாப இழப்பையும் கோரியது. மேல்முறையீட்டாளர் 6.3.1976-லிருந்து 22 ஆண்டுகளுக்கான மொத்த வருவாய் இழப்பினையும், இதர இழப்புக் கூறுகளையும் பின்வருமாறு கோரியது:-

		ரூ.
"(அ)	22 ஆண்டுகளுக்கான மொத்த இழப்பு (ரூ. 2.31 இலட்சம் x 22 ஆண்டுகள்)	50.82 இலட்சம்
(ஆ)	22 ஆண்டுகளுக்கான வருவாய் இழப்புக்கான வட்டி	70.13 இலட்சம்
(இ)	ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5000/- என்ற வீதத்தில் 75.52 ஏக்கருக்கு (வரையறுக்கப்பட்டது) 3 ஆண்டுகளுக்கான மறுநடவு மற்றும் பயிர் வளர்ப்பு செயல்பாடுகளுக்கான செலவு	7.00 இலட்சம்
(ஈ)	பயன்படுத்துவதற்கு தகுதியுடையதாக்குவதற்கு தொழிற்சாலை/ அலுவலகம் மற்றும் தொழிலாளர் கொட்டகைகளைப் பழுதுபார்த்தல் (வரையறுக்கப்பட்டது)	1.00 இலட்சம்
(உ)	மூன்றாண்டுகளுக்கு வருவாய் இழப்பு (ரூ.2.00 இலட்சம் x 3 ஆண்டுகள்) (மறுநடவு செய்து பயிரைப் பேணிவளர்த்து அவற்றைப் பலன்கொடுக்க ஆயத்தப்படுத்துதலுக்காக எடுத்துக்கொள்ளப்படும் காலம்) (வரையறுக்கப்பட்டது)	3.00 இலட்சம்
	மொத்தம்	1,31,95,000/-."

4. வாதி, நட்டுஈடு ஏதும் கோருவதற்குரியவரல்லர் என்றும், வாதிக்கும், பிரதிவாதிக்குமிடையே உடன்படிக்கை ஏதுமில்லை என்றும், பிரதிவாதி, வாதிக்கு நட்டம் ஏதும் ஏற்படுத்தவில்லை என்றும் எதிர்வழக்குரையில் பிரதிவாதியான எதிர்மேல்முறையீட்டாளரின் சார்பாக வாதிடப்பட்டது. 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 18(1)-இன் கீழான அறிவிக்கையில் தனியார் நிலம் ஏதும் சேர்க்கப்படவில்லை, ஆனால், இழப்பீடு கோரி மேல்முறையீட்டாளரால் படிவ எண் 8 தாக்கல் செய்யப்பட்டது, அதன்படியாக கையகப்படுத்துவதற்காக தனியார் நிலம் தன்னிச்சையாக

கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, திட்டமிடப்பட்ட காப்பிட பகுதிக்குள் அமைந்திருக்கும் தனியார் சொத்தைக் கையகப்படுத்தும் ஒரு திட்டக்கருத்து அனுப்பப்பட்டது, ஆனால் அத்திட்டம் அரசுக்கு அளவுக்கதிகமான செலவு ஏற்படுத்தக்கூடிய ஒன்று என்பதால் அது கைவிடப்பட்டதாகச் சொல்லப்பட்டது. நிலத்தைக் கையகப்படுத்த பிரதிவாதியிடமிருந்து ஒப்புதல் ஏதும் இல்லாதநிலையில், வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையே முழுமைபெற்ற ஒப்பந்தம் ஏதுமில்லை என்றும், *17.11.1993*-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி கடிதத்தின் மூலமாக திருநெல்வேலி ஆட்சியர், தனியார் நிலத்தைக் கையகப்படுத்தும் திட்டத்தைக் கைவிட கேட்டுக்கொள்ளப்பட்டு, ஆட்சியரும் உள்ளபடியே அத்திட்டத்தின் நடவடிக்கையைக் கைவிட்டிருக்கும்போது, பிரச்சினைக்குரிய நிலத்தை உண்மையாகவே கையகப்படுத்த-வில்லை என்றும் வாதிடப்பட்டது.

4.1. கையகப்படுத்தும் திட்டத்தைக் கைவிட்ட அரசின் செயல்பாடு, பிரச்சினைக்குரிய நிலத்தின் தகுதியைப் பாதிக்காது என்றும், நிலத்திலிருந்து பணவருவாய் ஏதும் பெற இயலவில்லை என்ற வாதியின் கோரிக்கை சரியல்ல என்றும், உத்தேசிக்கப்பட்ட காப்பிடத்திற்கான அறிவிக்கை, வாதியாலான நில உடைமையையும், அனுபோகத்தையும் பாதிக்கக்கூடியதல்ல என்றும் பிரதிவாதியான எதிர்மேல்முறை-யீட்டாளரால் வாதிடப்பட்டது. வழக்குநிலம் வனத் துறையால் எடுத்துக்கொள்ளப்படவோ, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவோ இல்லை என்பதும், சொத்தின் உண்மையான உடைமையிலும், அனுபோகத்திலும் உள்ள உரிமையாளரோ, குத்தகையாளரோ அதனை அனுபவிப்பதிலிருந்து ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை என்பதும் உறுதிபடுத்தப்பட்டது. வழக்குநிலம் வனத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக அனுமானித்துக்கொண்டாலுங்கூட, வாதி மடத்தின் குத்தகையாளரே, மேலும், வாதிக்கும்,

பிரதிவாதிக்கும் இடையே ஒப்பந்த சார்புறவு ஏதும் இல்லை என்ற காரணத்திற்காக பிரதிவாதிக்கு எதிராக கோரிக்கை வைக்கவோ, உரிமை எழுப்பவோ வாதிக்கு உரிமை இல்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது. நில உரிமையாளர்களுக்கு நட்டம் ஏதும் ஏற்படுத்தாததால், அவர்கள் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என்றும், வாதி அவரது பரிகாரத்தைச் சட்டப்படிக் கோர உரிமை ஏதும் கொண்டிருப்பாரானால், அதனை குத்தகைக்குக் கொடுத்தவருக்கு எதிராக கோரவேண்டுமேயன்றி பிரதிவாதிக்கு எதிராக அல்ல என்றும் பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.

4.2. பிரச்சினைக்குரிய நிலம் அறிவிக்கையிடப்பட்டதாக இருந்தாலுங்கூட, எவ்வாறாயினும் வழக்குமூலம் 19.11.1993 அன்று வாதியை அடைந்துவிட்டது என்பதால், நட்டஈட்டுக்கான உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்பட்டது என்றும், பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளர் வாதிட்டார். மேலும், நீதியர் ஈராயம், நீதிப்பேராணை மேல்முறையீட்டை (18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட அதன் தீர்ப்புரை வாயிலாக) அனுமதிக்கையில், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ள காலத்தை நீக்குவதற்காக, காலவரையறைச் சட்டம், 1963[10]-இன் வகையங்களின்பேரில் சார்ந்துநிற்பது வாதியின் விருப்பத்திற்குரியதாக இருந்தாலும், ஏற்கெனவே வழக்கு எதற்காக தொடரப்பட்டது என்றால், கையகப்படுத்தும் திட்டத்தை எதிர்ப்பதற்கும், அதன் பின்னர் பிரச்சினைக்குரிய நிலத்தை எடுத்துக்கொண்டதாகச் சொல்லப்படுவதற்கான இழப்பீட்டுக்குமானதாகும், மேலும், உரிமை வழக்கில் எதற்காக வழக்குத் தொடுக்கப்பட்டது என்றால், 6.3.1976-லிருந்து வருவாய் இழப்பு ஏற்பட்டதென சொல்லப்பட்டதற்கு நட்டஈடு கோருவதற்காகும் என்பதால் காலவரையறைச் சட்டம்

---

10. இதில் இதற்குப்பிறகு 'காலவரையறைச் சட்டம்' எனக் குறிப்பிடப்படும்.

வாதிக்கு எந்த உதவியும் புரியாது என்றும் பிரதிவாதி வாதிட்டார். மேலும், நில ஆள்வரை இல்லை என்றும், அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றும் கூறி, பிரதிவாதி ஆட்சேபணைகள் எழுப்பினார்.

5. தரப்பினர்களின் வாதுரைகளின்பேரில் விசாரணை நீதிமன்றம் விசாரணைக்காக பின்வரும் எழுவினாக்களை வனைந்தது:-

"1. இந்நீதிமன்றம், இவ்வுரிமை வழக்கை விசாரிக்க நில ஆள்வரை கொண்டுள்ளதா?

2. உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்பட்டுள்ளதா?

3. அவசியமான தரப்பினர்களைச் சேர்க்காமைக்காக இவ்வுரிமை வழக்கு பாதிப்படைகிறதா?

4. வழக்கு நிலம் வன விலங்குகள் காப்பிடத்தின் பகுதியாக அமைவதாக அறிக்கையிடப்பட்டதா?

5. வாதி இழப்பீட்டுக்குரியவரா? அவ்வாறு எனில், எவ்வளவு தொகைக்கு?

6. வாதி, வட்டி பெறுவதற்குரியவரா?

7. இழப்பீடு கோர தரப்பினர்களுக்கிடையே ஒப்பந்த சார்புறவு ஏதுமுள்ளதா?

8. எந்தப் பரிகாரத்திற்கு?"

6. விசாரணையில், வாதியின் கூட்டாளி, வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.42 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பிரதிவாதி, வாய்மொழி அல்லது ஆவணச்சான்று எதனையும் குறிப்பிடவில்லை எனத் தெரிகிறது.

உரிமை வழக்கைத் தனியமர் நீதியரசர் தீர்ப்பாணையிட்டார்

7. தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டபிறகு, உயர் நீதிமன்ற கற்றறிந்த தனியமர் நீதியரசர், அசல் உரிமை வழக்கை விவாதித்து, 15.10.2001-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை வாயிலாக எழுவினாக்களைத் தீர்மானிக்க முனைந்தார்.

7.1. கற்றறிந்த தனியமர் நீதியரசர், நில ஆள்வரை மற்றும் அவசியமான தரப்பினர்களைச் சேர்க்காமை தொடர்பான ஆட்சேபணைகளை நிராகரித்து, எழுவினாக்கள் 1 மற்றும் 3-ஐ வாதியின் சார்பாக தீர்மானித்தார். காலவரையறை தொடர்பான எழுவினா எண் 2-ஐ பொறுத்தவரையில், கற்றறிந்த தனியமர் நீதியரசர், 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையில் நீதியர் ஈராயத்தின் கருத்துரைகளையும், தரப்பினர்களின் வாதங்களையும் குறிப்பிட்டு, அவர், பிரதிவாதியுடன் மாறுபடுவதாகவும், உரிமை வழக்கு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டது என்று தீர்மானித்ததில் தயக்கங்கொள்ளவில்லை என்பதாகும். எனவே, எழுவினா எண் 2-ம், வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டது.

7.2. அதன்பிறகு, கற்றறிந்த தனியமர் நீதியரசர் 4 மற்றும் 5-ஆவது எழுவினாக்களை ஒன்றாகத் தீர்மானிப்பதற்கு எடுத்துக்கொண்டார், மேலும் இது தொடர்பாக, 6.3.1976-ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கையிலிருந்து தொடங்குகின்ற முந்தைய நடவடிக்கைகளையும், உத்தேசிக்கப்பட்ட கையகப்படுத்துகைக்கான இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுவதற்கான பல்வேறு அறுதியுரைகளையும் குறிப்பிட்டார். கற்றறிந்த நீதியரசர், எதிரெதிர் வாதங்களையும், பிரச்சினைக்குரிய நிலம் 1972-லிருந்து 1978 வரையில் மேம்படுத்தப்பட்டு, பயிர் நடவுசெய்து வேளாண் செய்துவரப்பட்டது, ஆனால், அப்பகுதி வன விலங்குகள் காப்பிடமாக அறிவிக்கப்பட்ட பிறகு, நிலம் கையகப்படுத்துதல் திட்டங்கள் காரணமாக சாதாரணமாக பயிர்செய்ய

அனுமதிக்கப்படுவதில்லை எனத் தெரிவித்து, அரசின் துணைச் செயலாளருக்கு, திருநெல்வேலி ஆட்சியரால் 28.5.1987-ஆம் தேதியிடப்பட்ட கடிதம் (வா.சா.ஆ.17) உட்பட சில ஆவணங்களையும் விரிவாகப் பார்வையிட்டார். மேலும், இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடும்பொருட்டு நிறைவேற்றப்பட்டவையான சிறப்பு ஆணையருக்கு, திருநெல்வேலி ஆட்சியரால் அனுப்பப்பட்ட 23.3.1990-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தையும் (வா.சா.ஆ.21) மற்றும் சிறப்பு ஆணையரின் 3.12.1990-ஆம் தேதியிடப்பட்ட செயல்முறை ஆணைகளையும் (வா.சா.ஆ.22) கற்றறிந்த தனியமர் நீதியரசர் பார்வையிட்டார். இறுதியாக, தொடர்புடைய அதிகாரிகளால் வருவாய் இழப்பாக ஆண்டொன்றுக்கு ரூ.2.31 இலட்சம் என்ற வீதத்தில் கணக்கிடப்பட்டது என்ற வாதியின் வாதங்களைக் கற்றறிந்த நீதியரசர் ஏற்றுக்கொண்டு, 22 ஆண்டுகளுக்கு ரூ.50.82 இலட்சம் என்ற இத்தொகையை வாதி பெறுவதற்குரியது எனத் தீர்மானித்தார். கற்றறிந்த நீதியரசர், வாதியின் மற்ற கோரிக்கைகளை நிராகரித்தபோதிலும், தொழிற்சாலை அலுவலகத்தைப் பழுதுபார்ப்பதற்கு மேலும் தொகை ரூ.1 இலட்சத்தை அனுமதித்தார். வாதி-மேல்முறையீட்டாளர் இம்முறையில், நட்டம் ஏற்பட்டதற்காக மொத்தத் தொகை ரூ.51.82 இலட்சம் பெறுவதற்குரியது என்று தீர்மானிக்கப்பட்டது. 6-ஆம் எழுவினாவின்பேரில் கற்றறிந்த நீதியரசர், மேலும் தொகை ரூ.35.06 இலட்சத்தை 6.3.1976-லிருந்து 18.9.1997 வரையிலும் ஆண்டொன்றுக்கு 6% வட்டியும் தீர்வளித்து, வாதி தாக்கல் செய்யும் நாளிலிருந்து கைதுறக்கும் வரையில் ஆண்டொன்றுக்கு 9% வட்டி பெறுவதற்குரியது என்றும் தீர்மானித்தார். 4 மற்றும் 5-ஆவது எழுவினாக்களின்பேரிலான காண்முடிவுகளின்படி 7-ஆவது எழுவினா தனிப்பட்டவகையில் வாதியின் சார்பாக தீர்மானிக்கப்பட்டது.

நீதியர் ஈராயம் தீர்ப்பாணையை எதிர்மறையாக்கி உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்தது

8. நட்டஈடு மற்றும் வட்டிக்காக கற்றறிந்த தனியமர் நீதியரசரால் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையால் மனக்குறையுற்று, பிரதிவாதியான எதிர்மேல்முறை-யீட்டாளர், உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம் முன்பாக மேல்முறையீடு மு.பி.மே. எண் 193/2002-ஐ தாக்கல் செய்தது. மறுபுறம் வாதியான மேல்முறையீட்டாளரும், கற்றறிந்த தனியமர் நீதியரசரின் தீர்ப்பாணையின் பகுதியால் மனக்குறைவுற்றது, ஏனெனில் அதன் கோரிக்கையைப் பொறுத்தவரையில், அது ஏற்கப்படாததால் மற்றொரு மேல்முறையீடான மு.பி.மே. எண் 178/2003-ஐ தாக்கல் செய்தது. இம்மேல்முறையீடுகள் இரண்டும், உ.ப.ம. எண். 8947/2006 என்ற அதிலுள்ள வழக்கிடை விண்ணப்பமும் நீதியர் ஈராயத்தால் அதனுடைய எதிர்ப்புக்குள்ளான 26.2.2007-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் ஒன்றாகப் பரிசீலிக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டன.

8.1. உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், அனைத்து தொடர்புடைய பின்புல அம்சங்களையும் (இதில் இதற்குமுன் கண்டவாறு) எதிரெதிர் வாதங்களையும் கவனத்திற்கொண்ட பிறகு, பொருந்தத்தக்க சட்டத்துடன் வழக்கைப் பொருத்தி ஆராய்ந்தது. இது தொடர்பாக, நீதியர் ஈராயம் முதலாவதாக, 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் தொடர்புடைய வகையங்களை விரிவாக எடுத்துரைத்து, இரு முக்கியமான வினாக்களான (1) மேல்முறையீட்டாளர் சட்டத்தின் பிரிவு 18(1)-இன் கீழ் அறிவிக்கை வெளியிட்ட பிறகு 25 ஆண்டுகளுக்கு இரண்டாவது குத்தகை பெற்றதாகச் சொல்லப்படுவதன் அடிப்படையில் பிரச்சினைக்குரிய நிலம் என்ற வகையில் உள்ள அந்நிலத்தில் உரிமை ஏதும் பெறக்கூடியவரா? என்பது குறித்தும்;

மற்றும் (2) மேல்முறையீட்டாளர் பிரச்சினைக்குரிய நிலத்தில் உரிமை ஏதும் கொண்டிருந்தாலுமே, இது நட்டஈடு கோரும் காரணம் எதையாவது எழுப்பலாம் என்றவகையில் அது மறுக்கப்பட்டுவிட்டதா? என்பது குறித்தும் ஆராய்ந்தது. நீதியர் ஈராயம், பதிவாவணத்திலுள்ள சான்றினைக் குறிப்பிட்டு, மற்றவற்றுக்கிடையில் வாதி-மேல்முறையீட்டாளருக்கு எதிராக முக்கியமான வினாக்களுக்கு பின்வருமாறு பதிலளித்தது:-

> *"21. தற்போதைய வழக்கில் முதலில் சட்டத்தின் பிரிவு 18(1)-இன் கீழ் காப்பிடம் குறித்த அறிவிப்பு இருந்தாலும், கையகப்படுத்தும் நடவடிக்கை கைவிடப்பட்டது என்பதை இதுவரையிலும் திரட்டப்பட்டுள்ள சங்கதிகள் சுட்டிக்காட்டுகின்றன. பிரிவு 18-இன் கீழ் அத்தகைய அறிவிக்கை வெளியிட்ட பிறகு, ".... அத்தகைய அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் எல்லைகளுக்குள் அடங்கியுள்ள நிலத்தில், அதன்பேரிலோ அல்லது அதன்மீதோ வாரிசுரிமையினாலன்றி உரிமை ஏதும் வந்தடையாது" என பிரிவு 20 கருத்துரைக்கிறது. பிரிவு 18-இன் கீழ் அறிவிக்கையின் வெளியீடு மட்டுமே எந்தச் சொத்தின் உரிமையாளரும் அவரது இயல்பான உரிமைகளைச் செலுத்துவதை தடை செய்வதில்லை என ஏற்கெனவே ஆய்வுசெய்யப்பட்ட வகையங்கள் குறிப்பிடுகின்றன, அதேபோன்று அவ்வுரிமை, அவரது வாரிசாலும் செலுத்தப்படலாம். பிரிவு 20-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தடையாணை அப்பகுதிக்குள் அடங்கியுள்ள நிலத்தில் அல்லது*

அதன்மீதான உரிமை எதனையும் வாழ்வோரிடையே மாற்றுவது தொடர்புடையதாகும். ஆகையால், ஏற்கெனவே ஐந்தாண்டுகளாக குத்தகையாளராக இருந்துவரும் வாதியும் அசல் உரிமையாளரும் அவ்வகையிலான உரிமை எதனையும் செலுத்துவதிலிருந்து தடைசெய்யப்படவில்லை. எனினும், பின்னிட்டு 25 ஆண்டுகளுக்கான குத்தகை, பிரிவு 18-இன் கீழ் அறிவிக்கை வெளியிட்ட பிறகு வாதியின் சார்பாக நிறைவேற்றப்பட்டது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளிலிருந்து தெளிவாகிறது. பிரிவு 18-இன் கீழ் அறிவிக்கை வெளியிட்ட பிறகு அசல் உரிமையாளரால் ஒப்புக்கொண்டவகையில் நிறைவேற்றப்பட்ட பின்னிட்டு 25 ஆண்டுகளுக்கான குத்தகையின் அடிப்படையில் வாதி உரிமை கோரியிருப்பதால், வாதி, அச்சமயத்தில் குறைந்தபட்சம் அரசுக்கு எதிராகவாவது உரிமை ஏதும் பெற்றிருந்தாரா? என்பதும் ஐயத்திற்குரியதாகும். எவ்வாறாயினும், வாதி ஒரு குத்தகையாளராக உரிமை ஏதும் பெற்றிருந்தார் என அனுமானித்துக்கொண்டாலுங்கூட, வாதி அவரது உரிமைகளைச் செலுத்துவதை சட்டப்படியாக தடுக்கும் தடையாணை ஏதுமில்லை என்பதாகும்.

*** *** ***

24. தற்போதைய வழக்கில், கோரப்படும் பகுதியைப் பொறுத்தவரையில், வாதிக்கும், அசல் உரிமையாளருக்கும் 1976-ஆம் ஆண்டுக்கு முன்னதாக மரங்களை வெட்டுவதற்கான அனுமதி வழங்காதது தவிர, அதில் அவர்கள் உரிமையைச் செலுத்துவதிலிருந்து தடைசெய்யப்பட்டதில்லை. மேலும், அவ்வுரிமையிலிருந்து ஒருபோதும் நீக்கப்படவுமில்லை என்று சுட்டிக்காட்ட பதிவாவணத்தில் எதுவுமில்லை. இழப்பீட்டை உறுதிசெய்வதைச் சுட்டிக்காட்டும் பதிவில் பல கடிதங்கள் உள்ளன என்பது ஐயத்திற்கிடமின்றி உண்மையென்றாலும், இழப்பீட்டையும், தீர்வத்தையும் இறுதிசெய்யும்பொருட்டு அதிகப்பட்ச தொகையை ஒதுக்குவதற்கு ஆட்சியரும் மற்ற அதிகாரிகளும் கோரப்பட்டிருந்தனர், ஆனால், வாதியையும், நில உரிமையாளரையும் பொறுத்தவரையில் தீர்வளிப்பு நடவடிக்கைகள் எப்போதோ இறுதிசெய்யப்பட்டுவிட்டது என்று குறிப்பிட, பதிவில் ஆவணம் எதுவுமில்லை.

25. வாதியின் நிலங்கள் வனவிலங்குகள் காப்பிடமாக அறிவிக்கப்பட்டு, அதன் மேம்பாட்டுக்கான செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுவிட்டன என்றுரைக்கும் 28.5.1987-ஆம் தேதியிடப்பட்ட கடிதமான வா.சா.ஆ.17, ஆட்சியரால், அரசின் துணைச் செயலாளருக்கு எழுதப்பட்டது என்பது ஐயத்திற்கிடமற்ற உண்மை. எனினும், அரசின் இரு செயலாளர்களுக்கு இடையிலான இக்கடிதப் போக்குவரத்து, அசல் உரிமையாளருக்கோ,

வாதிக்கோ குறிப்பிட்ட உரிமை எதுவும் மறுக்கப்படுவதாகப் பொருள்கொண்டுவிடக்கூடாது. சட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால், அசல் உரிமையாளரும், வாதியும் காட்டுக்குள் சென்று, நுகர்பொருட்களைத் திரட்டுவதிலிருந்து தடுக்கப்பட்டனர் என்பதைச் சுட்டிக்காட்ட பதிவில் ஏதுமில்லை. ஏற்கெனவே வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் விளம்புகைகளின் நோக்கம் குறித்து தவறாகப் புரிந்துகொண்டு, வாதி தன் செயல்பாடுகளை நிறுத்தியிருந்தால், அது வாதியின் துரதிருஷ்டமே. மேலும், அரசு அதன் சட்டப்படியான உரிமையைச் செலுத்தும்வகையில் வாதியை ஏதும் சட்டமுறைமையற்ற முறையில் தடுத்துவிட்டதாகச் சொல்லமுடியாது. பிரிவு 18-இன்படி வெளியிடப்பட்ட அறிவிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த நிலங்களை பல்வேறு கடிதப்போக்குவரத்துகளும் குறிப்பிடுவதாலேயே, அசல் உரிமையாளரும், வாதியும் உரிமை இழந்துவிட்டனர் என்று சொல்லிவிடமுடியாது. 10 ஏக்கருக்குள் உள்ள மரங்கள் முழுவதையும் வெட்டுவதற்கு அனுமதி வழங்க மறுத்தது தொடர்பான ஒரேயொரு நேரடி ஆவணம்தான் ஏற்கெனவே ஆராயப்பட்டுள்ளது. மேலும், இக்காரணி, வாதியால் கோரப்பட்டவாறான வானளாவிய தொகையைக் கோருவதற்கான வழக்கு மூலத்திற்கு வழிவகுக்காது. வாதி மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்கப்படாததால், அப்பகுதியை நீக்கிய

பிறகு, மரங்களை அவரது சுயநலத்துக்காக பயன்படுத்துவதற்கு அவை அங்கேயே இன்னமும் இருக்கின்றன என நன்கு முடிவெடுக்கலாம். எனினும், 1987-ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட துறைகளுக்கிடையேயான கடிதமான மேற்படி ஆவணத்திலிருந்து மட்டுமே, அசல் உரிமையாளரும், வாதியும் உண்மையாகவே அதனதன் உரிமைகளைச் செலுத்துவதிலிருந்து தடுக்கப்-பட்டிருந்ததாகப் பொருள்கொள்ளப்படமுடியாது.

*** *** ***

27. வா.சா.ஆ.14, 10 ஏக்கரிலுள்ள மரங்கள் முழுவதையும் வெட்டுவதற்கான வேண்டுரை தொடர்பானதாகும். 22 ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.2,31,000/- என்ற வீதத்தில் இழப்பு ஏற்படுவதாக கோருவதற்கான அடிப்படையாக அது அமைந்துவிடாது. தாக்கல் செய்யப்பட்டிருந்த பல்வேறு நீதிப்பேராணை மனுக்களிலும், நீதிப்பேராணை மேல்முறையீடு-களிலும், அசல் உரிமையாளரும், வாதியும் எக்காலத்திலேயாவது அவர்களுக்குரிய இயல்பான உரிமைகளைச் செலுத்துவதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டு எதனையும் நாங்கள் காணவில்லை. பிரதிவாதி தரப்பில் சட்டவிரோதமான செயல் ஏதும் இல்லாவிட்டால் ஏன் வாதிக்கு நட்டத்துக்கான இழப்பீடு செலுத்தவேண்டும் என்பதைக் குறித்து நாங்கள் புரிந்துகொள்ள தவறிவிட்டோம். சட்டத்தின் பிரிவு 18-இன் கீழ் விளம்புகைக்கான

நோக்கத்தை வாதி தவறாகப் புரிந்துகொண்டுவிட்டதாலேயோ அல்லது சில விசாரணைகள் நிலுவையிலுள்ளன என்பதாலேயோ, அது நட்டஈடு தீர்வளிப்பதற்கு ஒரு காரணமாகாது."

8.2. உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட முந்தைய தீர்ப்புரையின் பொருளையும், செயல்விளைவினையும் ஆராய்ந்ததோடு, அதிலுள்ள கருத்துரைகள், தரப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையின் அளவு குறித்து மட்டுமே தீர்மானிக்கப்பட்டிருந்ததாகப் பொருள்கொள்கிறதேயன்றி, அவர்களுக்கு உரிமைகளும், பொறுப்புரிமைகளும் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக பொருள்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியது. அரசு அல்லது அதன் அதிகாரிகளின் தரப்பில் சட்டவிரோதமான செயல்பாடு இருந்ததென்ற குறிப்பிட்ட நேர்வினை வாதி-மேல்முறை-யீட்டாளர் வாதுரைத்து, மெய்ப்பிக்கத் தவறிவிட்டதால், நட்டஈடாக தொகை எதனையும் வசூலிப்பதற்குரியவரல்ல என நீதியர் ஈராயம் பின்வருவனவற்றில் தீர்மானித்துள்ளது:-

"28. நீதியர் ஈராயத் தீர்முடிவில், நீதிப்பேராணை மேல்முறையீட்டை அரசு சார்பாக தீர்மானிக்கையில், பாதிக்கப்பட்ட நபர் போதிய இழப்பீடு கோருவதற்கு வாய்ப்புள்ளது என்று சில கருத்துகள் சுட்டிக்காட்டுகின்றன என்பது ஐயத்திற்கிடமற்ற உண்மை. அத்தகைய கருத்துரைகள் தரப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டிய தீர்வத்தின் அளவினை மட்டுமே பொருள்கொள்கிறதேயன்றி அவர்களின் உரிமைகளும், பொறுப்புரிமைகளும் தீர்மானிக்கப்-பட்டிருந்ததாகப் பொருள்கொள்வதாகக் கூறஇயலாது. அதற்குமாறாக, காப்பிடம் என்ற நோக்கத்திற்காக நிலத்தைக்

கையகப்படுத்த, அரசை வற்புறுத்த இயலாது என்றபோதிலும், சட்டத்திற்கிணங்க வெளிப்படையாகவே பாதிப்புற்ற தரப்பினர் அவரது பரிகாரத்தை நாடிப்பெறுவதற்கான வாய்ப்பிருந்ததாக மட்டுமே தெளிவாக்கப்பட்டது. அரசின் அல்லது அதன் அதிகாரியின் ஏதும் சட்டவிரோதமான செயல்பாட்டின் காரணமாக நபர் ஒருவர் பாதிப்பேதும் அடைவாராயின், நட்டத்திற்கான இழப்பீடு எதுவும் கோரும்பொருட்டு, அத்தகைய சட்டவிரோதமான செயல்பாட்டினைக் குற்றஞ்சாட்டி, தெளிவாக மெய்ப்பிக்கவேண்டியது வாதியே. வாதி, சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட இழப்பீடு எதுவும் பெற வாதி உரிமை ஏதும் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு. அரசு அல்லது அதன் அதிகாரியின் தரப்பிலான ஏதும் சட்டவிரோதமான செயல்பாட்டின் காரணமாக அவர் ஏதும் தொகை பெறவேண்டுமாயின், அக்குறிப்பிட்ட நேர்வு மெய்ப்பிக்கப்படவேண்டும். தற்போதைய வழக்கில், எங்களுடைய ஆழ்ந்தாராய்ந்த கருத்துப்படி, அத்தகைய குறிப்பிட்ட நேர்வு எதுவும் வாதுரைக்கப்படவுமில்லை, மெய்ப்பிக்கப்படவுமில்லை."

8.3. அடுத்து, உயர் நீதிமன்றம், காலவரையறை குறித்த பிரச்சினையைப் பார்வையிட்டு, காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-ஐ குறிப்பிடுகையில், வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள காலத்தை நீக்கிவிடமுடியுமா? என்று அதன் முதல்நிலை ஐயத்தைத் தெரிவித்து, முக்கியமாக வாதியின் கோரிக்கை நற்கூறுகளின்பேரில் நிராகரிக்கப்பட்டிருந்தது என்ற காரணத்திற்காகவே அவ்வழக்கை கைவிட்டது. நீதியர் ஈராயம் கருத்தறிவித்ததாவது:-

"29. ... தற்போது காப்பிடத்திலிருந்து அப்பகுதி நீக்கப்பட்டுவிட்டது, ஆதலால் அது பாதிப்படைந்துவிட்டது என்ற சங்கதியின் காரணமாக வாதி நட்டஈடு கோருகிறார், ஐயத்திற்கிடமின்றி அந்த நாளன்று, அதாவது, 19.11.1993 அன்று வழக்குமூலம் எழுந்தது. அவ்வுத்தரவை நீக்குவதற்காக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு ஐயத்திற்கிடமின்றி வேறான பரிகாரத்திற்கானதாகும். நீதிப்பேராணை மனு நற்கூறின்பேரில் தள்ளுபடி செய்யப்பட்டதேயன்றி, அதிகாரவரம்பு இல்லை என்பதற்காக அல்ல. அத்தகைய வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலிருக்கும் காலத்தை, காலவரையறைச் சட்டம், பிரிவு 14-இன் கீழ் நீக்கிவிடமுடியுமா?' என்பதே எங்களுடைய முதல்நிலை ஐயமாக இருந்தது. எனினும், நாங்கள் வாதியின் கோரிக்கையை எதிர்மறையாக்கிவிட்டதால், அத்தகைய வினாவினை மேற்கொண்டு ஆராயத்தேவையில்லை."

8.4. இறுதியாக, நீதியர் ஈராயமும், வாதியின் வட்டிக்கான கோரிக்கையை நிராகரித்ததுடன், எழுவினா எண் 6-இன்பேரில் கற்றறிந்த தனியமர் நீதியரசரின் காண்முடிவுகளை நீக்கறவு செய்தது.

8.5. தொடர்புடைய பிரச்சினைகளின்பேரில் உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம் தன்னுடைய காண்முடிவுகளைக் கருத்திற்கொண்டு, அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை அனுமதித்து, வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தது. அதற்கேற்ப வாதி-மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, இம்மேல்முறையீடு.

<u>எதிரெதிர் வாதங்கள்:</u>

9. 26.2.2007-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையை எதிர்த்து, மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், வழக்கிலுள்ள அனைத்து பின்புல அம்சங்களுக்கும், 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் தொடர்புடைய வகையங்களுக்கும் எங்களை மிகுந்த சிரத்தையுடன் இட்டுச்சென்று, உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், கற்றறிந்த தனியமர் நீதியரசரின் ஆழ்ந்தாராய்ந்த தீர்முடிவினை எதிர்மறையாக்கியதிலும், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்ததிலும் சட்டப்படி பிழைபுரிந்துள்ளது என அழுத்தமாக வாதிட்டார். கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், உடைமையுரிமையையும், சொத்து குறித்த சட்ட இயல் சார்ந்த கோட்பாடுகளையும் குறிப்பிட்டு, வழக்கு நிலத்தின் மீதான குத்தகையுரிமைகளும், அதிலுள்ள பயிர்களும் மேல்முறையீட்டாளரின் மதிப்புமிக்க சொத்தாக இருந்துவந்தன என்றும், வழக்கு நிலத்தின் நுகர்வுரிமையைப் பறிப்பது, மேல்முறையீட்டாளரின் சொத்துரிமைக்கு நேரடியான பாதகத்தை ஏற்படுத்தியதற்காக மேல்முறையீட்டாளர் நட்டஈடு கோருவதற்குரியது என்றும் வாதிட்டுள்ளார். நிலம் மேல்முறையீட்டாளரால் 1972-ஆம் ஆண்டிலிருந்து 1978 வரையில் மேம்படுத்தப்பட்டு வந்தது என்றும், பிரச்சினைக்குரிய நிலத்தை வன விலங்கு காப்பிடமாக அறிவித்தப் பின்னர், அந்நிலத்தைக் கையகப்படுத்தும் திட்டத்தின் காரணமாக மேல்முறையீட்டாளர் அதன் பணியைத் தொடர அனுமதிக்கப்படவில்லை என்ற சங்கதிகளை ஒப்புக்கொண்டு, ஆட்சியரால் அரசு வன மற்றும் மீன்வளத் துறையின் துணைச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 28.5.1987-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளதை கற்றறிந்த வழக்குரைஞர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். மேல்முறையீட்டாளர் பிரச்சினைக்குரிய நிலத்தைப் பயன்படுத்துவதிலிருந்து உண்மையிலேயே தடுக்கப்பட்டது என்னும் சங்கதி

தெளிவாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும், அதற்கெதிராக சான்றேதுமில்லை என்றும், கற்றறிந்த தனியமர் நீதியரசர், பிரதிவாதியின் அத்தகைய ஏற்புகையின்பேரில் சரியாகவே மேல்நடத்தியிருந்தார் என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார். ஏற்புகையே பிரதிவாதிக்கெதிரான சிறந்த சான்றாக விளங்குவதால் உரிமை வழக்கு சரியாக தீர்ப்பாணையிடப்பட்டது என்றும், நீதியர் ஈராயம் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை மாற்றியமைத்ததில் பிழைபுரிந்துவிட்டது என்றும் பணிந்துரைக்க கற்றறிந்த வழக்குரைஞர் **திரு. ஜான் -எதிர்- ரிட்டனிங் ஆபிசர் மற்றும் பலர் :** *(1977) 3* **எஸ்.சி.சி.** *540,* **சுஷில் குமார் -எதிர்- இராகேஷ் குமார் :** *(2003) 8* **எஸ்.சி.சி.** *673* மற்றும் **ஸ்டான்டர்ட் சார்டர்ட் பேங்க் -எதிர்- ஆந்திரா பேங்க் பினான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட் மற்றும் பலர் :** *(2006) 6* **எஸ்.சி.சி.** *94* ஆகியவற்றின் தீர்முடிவுகளைச் சார்ந்துநின்றார்.

9.1. மேலும், *1972*-ஆம் ஆண்டு சட்டத்தின் திருத்தப்படாத வகையங்களின்படி, ஒரு நிலம் பிரிவு *18*-இன் கீழ் அறிக்கையிடப்பட்டுவிட்டால், நில உரிமையாளருங்கூட அந்நிலத்தைப் பயன்படுத்துவதிலிருந்து தடைசெய்யப்படுவார், மேலும், அவர் வழக்கு நடவடிக்கைகள் முடியும்வரையில் காத்திருக்கவேண்டும் என்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் மேலும் வாதிட்டுள்ளார். கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, நிலுவையிலுள்ள வழக்கு நடவடிக்கைகள் முடியும்வரையிலுள்ள கட்டுப்பாடுகள், மேல்முறையீட்டாளர் அதன் சொத்தினைப் பயன்படுத்தும் அதன் உரிமையை நேரடியாகப் பாதித்துவிட்டன என்பதாகும்; வழக்கு நிலம் தேவையின்றி கையகப்படுத்தப்பட கோரப்பட்டது, பின்னர் இழப்பீடு அளிப்பதைத் தவிர்ப்பதற்கு, இருபது ஆண்டுகளுக்கும் மேலான பிறகு அதனை விலக்கிவிட்டவிடத்து இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர்

நிலத்தை தேவையானவற்றுக்கு பயன்படுத்தப்பட முடியாதபோது, இக்காலம் முழுவதும் ஏற்பட்ட இழப்புக்காக நட்டஈடு கோருவதற்குரியது என்பதாகும். மேல்முறையீட்டாளர் பயிரிடும் நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்வதிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளதால், பிரச்சினைக்குரிய நிலத்துக்கான ஆண்டு விளைச்சலை மதிப்பிட முடியவில்லை என மாநில அரசே ஒப்புக்கொண்டுவிட்டதால், மேல்முறையீட்டாளர் அதன் உரிமைகளைச் செலுத்துவதிலிருந்து தடுக்கப்பட்டது என்ற கற்றறிந்த தனியமர் நீதியரசரின் கருத்துரைகள் சரியானவையல்ல, மேலும், மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பான நட்டஈடும் சரியாகவே அனுமதிக்கப்பட்டிருந்தன என்று கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார். ஆதலால், கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுவதற்குரியது, மேலும், கற்றறிந்த தனியமர் நீதியரசரின் தீர்ப்புரை மீட்டளிக்கப்படுவதற்குரியதாகும். இவ்வாதுரைகளுக்கு ஆதரவாக, கற்றறிந்த வழக்குரைஞர், **யூனியன் ஆ∴ப் இந்தியா -எதிர்- உறரி கிருஷன் கோஸ்லா (இறந்தவர்) சட்டப்படியான சார்பாளர்கள் மூலமாக :** *(1993)* **சப்ளி** *(2)* **எஸ்.சி.சி.** *149* உட்பட பல்வேறு தீர்முடிவுகளைச் சார்ந்துநின்றார், இது கீழ்க்கண்ட காரணங்களுக்காக விரிவாகக் கூறப்படவேண்டியதில்லை.

9.2. நட்டஈட்டின் அளவைப் பொறுத்தவரையில், பிரச்சினைக்குரிய நிலத்தைப் பயன்படுத்துவதிலிருந்து மேல்முறையீட்டாளரை தடைசெய்திருந்ததால், அதற்கு பெரும் இழப்பேற்பட்டு பாதிப்படைந்ததோடு, நுகர்வுரிமையை எடுப்பதிலிருந்தும் தடுக்கப்பட்டது எனும்போது, தீர்வளிப்பு விசாரணையின்போது எதிர்மேல்முறையீட்டாளர்-அரசின் அதிகாரிகளால் மதிப்பிடப்பட்ட வருவாய் இழப்பின் அடிப்படையில் நட்டஈட்டின் அளவு சரியாகவே மதிப்பிடப்பட்டிருந்தது; மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட இழப்பினையும்,

பாதிப்பினையும் ஆராய்ந்து அதைவிட குறைவான அளவிலேயே மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

9.3. 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *60* தொடர்பாக பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக வலியுறுத்தப்பட கோரப்பட்ட வாதுரைகளையும் குறிப்பிட்டு, அத்தகையதொரு வாதம் எதிர்வழக்குரையிலும் எடுக்கப்படவில்லை, அதுகுறித்த எழுவினாவும் வனையப்படவில்லை, அத்தகைய வாதம் எதுவும் தனியமர் நீதியரசர் முன்பாக வலியுறுத்தப்படவுமில்லை, ஆகவே எதிர்மேல்முறையீட்டாளர் அத்தகையதொரு வாதத்தை பிந்தைய நிலையில் எடுக்கவியலாது. மேலும், இவ்வாதங்களுக்கு பாதகமின்றி, **கஸ்தூரி லால் -எதிர்- உ.பி. மாநில அரசு : ஏ.ஐ.ஆர்.** *1965* **எஸ்.சி.** *1039*-இல் இந்நீதிமன்றத் தீர்முடிவின் கோட்பாடுகள், மாநில அரசைப் போர்வைகொண்டு மறைப்பதாகவோ அல்லது அதன் அதிகாரிகளின் தீங்கான செயல் தொடர்பாக முழுமையான காப்புரிமையளிப்பதாகவோ அல்ல என்று வாதிட்டு, குறிப்பாக, **என். நாகேந்திர ராவ் மற்றும் கம்பெனி -எதிர்- ஆ. பி. மாநில அரசு :** *(1994) 6* **எஸ்.சி.சி.** *205* மற்றும் **யூனியன் ஆ.ஃப் இந்தியா -எதிர்- சஞ்செட்டி புட் பிராடக்ட்ஸ் லிமிடெட் :** *(2015) 15* **எஸ்.சி.சி.** *447*-இன் தீர்முடிவுகளையும் குறிப்பிட்டுக்காட்டினார்.

9.4. மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு உரிய காலத்திற்குள்ளாகவே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றும், காலவரையறை என்ற காரணத்தின்பேரில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்க முடியாது என்றும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதிட்டார். கற்றறிந்த வழக்குரைஞர், தொிவிக்கப்பட்ட கருத்துரைகளையும், *18.9.1997*-ஆம் தேதியிடப்பட்ட நீதியர் ஈராயத்தால் வழங்கப்பட்ட உரிமையையும் குறிப்பிட்டுள்ளார். கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, இவ்வழக்கில்

மேல்முறையீட்டாளர், *19.11.1993*-ஆம் தேதியிடப்பட்ட ஆட்சியரின் உத்தரவுக்கு எதிராக நீதிப்பேராணை மனுவில் வழக்கை முன்னதாக நடத்திவந்தது எனுமிடத்து, உள்ளபடியே கற்றறிந்த தனியமர் நீதியரசர் நீதிப்பேராணை மனுவை அனுமதித்து, காப்பிடத்திலிருந்து வழக்கு நிலத்தை நீக்குகின்ற மேற்படி உத்தரவை நீக்கிவிட்டதால் நடைமுறையிலிருக்கும் மேற்படி உத்தரவு முடிவுக்கு வந்துவிட்டது, மேலும் அது *18.9.1997*-ஆம் தேதியிடப்பட்ட நீதியர் ஈராயத் தீர்ப்புரைக்குப் பிறகுதான் புத்துயிர்பெற்றது என்பதாகும். வழக்கினைக் கருத்திற்கொண்டும், காலவரையறைச் சட்டத்தின் பிரிவு *14*-ஐ கருத்திற்கொண்டும், கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, மேற்படி நீதிப்பேராணை வழக்கை நடத்துவதிலான காலவிரயம் நீக்கப்படவேண்டும், ஆகவே, *8.6.1998* அன்று தொடரப்பட்ட உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்படவில்லை என்பதாகும். கற்றறிந்த வழக்குரைஞர், **இராமேஷ்வர் லால் -எதிர்- முனிசிபல் கவுன்சில், டாங்க் மற்றும் பலர் :** *(1996) 6* **எஸ்.சி.சி.** *100* மற்றும் **யூனியன் ஆ.ப் இந்தியா -எதிர்- ஷிரிங் கன்ஸ்டிரக்ஷன் கம்பெனி (பி) லிமிடெட் :** *(2006) 8* **எஸ்.சி.சி.** *18*-இன் தீர்முடிவுகளைக் குறிப்பிட்டுக்காட்டினார். உரிமை வழக்கு, நீதியர் ஈராயத்தால் வழங்கப்பட்ட தீர்முடிவு நாளிலிருந்து ஓராண்டுக்குள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், காலவரையறைச் சட்டத்தின் வகுமுறைக்கூறு *72*-இன் தேவை நிறைவுசெய்யப்பட்டுள்ளது என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார்.

மேலும், **ஆ.பி. மாநில அரசு -எதிர்- சல்லா இராம்கிருஷ்ண ரெட்டி மற்றும் பலர் :** *(2000) 5* **எஸ்.சி.சி.** *712*-இன் தீர்முடிவினைப் பொறுத்தவரை, தொடர்புடைய அதிகாரியின் நடவடிக்கை உண்மையாக இல்லாததால், காலவரையறைச் சட்டத்தின் வகுமுறைக்கூறு *113*-இன்படி, மூன்றாண்டுகள் காலவரையறை பொருந்தும் என

கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார். கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், உரிமை வழக்கு காலவரையறைக்குள் நன்கு உள்ளது என்பதாகும்.

10. பிரச்சினைக்குரிய நிலம் அரசால் கையகப்படுத்தப்படாதபோது நட்டஈட்டுக்கான கோரிக்கை எதனையும் மேல்முறையீட்டாளர் செய்வதற்குரியவரல்ல என அதற்குமாறாக எதிர்மேல்முறையீட்டாளர்-அரசுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார். பிரச்சினைக்குரிய நிலம் மடத்துக்கு சொந்தமானதாகும். அப்படியே அது மேல்முறையீட்டாளருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும், அரசுக்கும், மேல்முறையீட்டாளருக்கும் இடையே ஒப்பந்த சார்புறவு ஏதுமில்லாததால் மேல்முறையீட்டாளரையும் மடத்தையும் முன்னிட்டு மட்டுமே பரிகாரம் அளிக்கப்படுமேயன்றி அரசை முன்னிட்டு அல்ல என கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார். தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம், *1959*[11]-இன் பிரிவு *34*-இன்படி, *25* ஆண்டு காலத்திற்கான குறிப்பிட்ட குத்தகை முற்றிலும் செல்லாதது, ஏனென்றால் அத்தகையதொரு குத்தகை தொடர்புடைய அதிகாரியால் ஒப்பளிக்கப்பட்டாலன்றி, குத்தகை அளிக்கப்பட்டிருக்க இயலாது; மேலும், இது தொடர்பாக வா.சா.*1*-ஆல் அனுமதி பெறப்பட்டிருப்பதாக ஒரு மேலீடானக் கூற்று தெரிவிக்கப்பட்டதேயன்றி, தேவைப்படும் ஒப்பளிப்புக்கான ஆவணச்சான்று ஏதும் அளிக்கப்படவில்லை என்ற வாதுரையையும் கற்றறிந்த வழக்குரைஞர் எழுப்பியுள்ளார்.

---

11. இதில் இதற்குப்பிறகு *'1959*-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம்' எனக் குறிப்பிடப்படும்.

10.1. அரசும், அதன் அதிகாரிகளும் சட்டப்படி அதாவது சட்டப்படியான முறையில் *1972*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் தங்களுடைய அதிகாரங்களைச் செலுத்தியிருந்தாலும், *1972*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *60*-இன் வகையங்களின் கருத்துப்படி நட்டஈட்டுக்கான உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார். மேலும், கற்றறிந்த வழக்குரைஞர், *(மேற்படி) கஸ்தூரி லால்* வழக்கின் தீர்முடிவையும் குறிப்பிட்டுக் காட்டி, பிரச்சினைக்குரிய நிலம், பொது நிதியின் வட்டி உட்பட உரிய மறுபயன்களின்பேரில் திட்டமிடப்பட்ட காப்பிடத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதால், எதிர்ப்புக்குள்ளான நடவடிக்கை நட்டஈடு கோருவதற்கான காரணம் எதற்கும் வழிகோலவில்லை என்று பணிந்துரைத்தார். மேலும் கற்றறிந்த வழக்குரைஞர், வாதி ஒருபோதும் உடைமைநீக்கம் செய்யப்படவில்லை என்று குறுக்கு விசாரணையில் உள்ள அவரது கூற்றினையும் குறிப்பிட்டுக்காட்டி, சட்டப்படியான உரிமைகள் எவையும் மீறப்பட்டிருக்காததால், மேல்முறையீட்டாளரால் நட்டஈடு கோருகின்ற சந்தர்ப்பம் ஏதும் மெய்ப்பிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

10.2. கற்றறிந்த வழக்குரைஞர் நட்டஈட்டின் அளவு குறித்த பிரச்சினையின்பேரில், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் கருத்துரைகளைக் குறிப்பிட்டுக்காட்டி, உண்மையான இழப்பு குறித்து எதுவும் மெய்ப்பிக்கப்-பட்டிருக்காததாலும், வழக்கு நிலம் காப்பிடத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதாலும், எந்தவொரு காரணமும் அல்லது போதிய காரணவிளக்கமும் இன்றி கற்றறிந்த தனியமர் நீதியரசர், *22* ஆண்டுகளுக்கான வருவாய் இழப்பு ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது தொடர்பாக நட்டஈட்டை அளவிட்டதில் பெரும் பிழைபுரிந்துவிட்டதாகவும் பணிந்துரைத்துள்ளார்.

10.3. 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட நீக்கல் ஆணை வழங்கியதன்பேரில் வழக்குமூலம் சேர்ந்தடைந்தது என அனுமானித்துக்கொண்டாலுங்கூட, பிரச்சினையிலுள்ள உரிமை வழக்கு தெளிவாகவே காலவரையறையால் தடைசெய்யப்பட்டுவிட்டதென எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரும் வலுவாக வாதிட்டுள்ளார். கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றுப்படி, *19.11.1993*-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை எதிர்த்து மடத்தாலும், மேல்முறையீட்டாளராலும் கூட்டாக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் நட்டஈடு கோரிக்கை ஏதுமில்லையாதலால் அந்த நீதிப்பேராணை மனுவின் வழக்குப்பொருளும், தற்போதைய உரிமை வழக்கிலுள்ள வழக்குப்பொருளும் ஒன்றல்ல என்பதால் காலவரையறைச் சட்டத்தின் பிரிவு *14* மேல்முறையீட்டாளரைக் காப்பாற்றாது என்பதாகும். காலவரையறைச் சட்டத்தின் பிரிவு *14*-இன் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காததால், மேற்படி நீதிப்பேராணை மனுவின் வழக்கை நடத்தும் காலம் நீக்கப்படமுடியாது, ஆகவே, காலவரையறையின் அடிப்படையில் உரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகிறது என கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார். **யஷ்வந்த் தியோராவ் -எதிர்- வால்சந்த் இராம்சந்த் : ஏ.ஐ.ஆர். *1951* எஸ்.சி. *16*** என்ற வழக்கின் தீர்முடிவின்மீது கற்றறிந்த வழக்குரைஞர் சார்ந்துநின்றார்.

<u>முதனிலை கருத்துரைகள்</u>

11. நாங்கள், எதிரெதிர் வாதங்களை ஆழ்ந்தாராய்ந்ததோடு, பொருந்தத்தக்க சட்டம் குறித்து வழக்காவணத்தையும் ஆராய்ந்தோம். வழக்கை முழுமையாக ஆராய்ந்தால், வாதி-மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு காலவரையறையாலோ, மற்றவகையாலோ தடைசெய்யப்பட்டது என்றும்,

வாதி-மேல்முறையீட்டாளருக்கு, எதிர்மேல்முறையீட்டாளர்-அரசிடமிருந்து நற்கூறுகளின்பேரில் நட்டஈடு கோருவதற்கான வழக்கேதுமில்லை என்றும் நாங்கள் ஐயத்திற்கிடமின்றி கருதுகிறோம். அதாவது, உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை சரியாக அனுமதித்ததோடு, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படையற்ற உரிமை வழக்கை சரியாகவே தள்ளுபடி செய்துள்ளது. எனவே, இம்மேல்முறையீடு நற்கூறின்றி உள்ளதால் தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகும்.

12. காலவரையறை மற்றும் நட்டஈட்டுக்கான மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின் நிலைநிறுத்தத்தக்க தன்மை குறித்த வினாக்களை விரிவாகக் கூறுவதற்கு முன்பு, *1959*-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்தின் (இந்நீதிமன்றம் முன்பாக வலியுறுத்தப்பட்டவாறு) தொடக்கநிலையில் மேல்முறையீட்டாளர் சார்பாக குறிப்பிடப்படும் இரண்டாம் குத்தகையின் செல்லுந்தன்மையைக் குறித்தும், *1972*-ஆம் ஆண்டு சட்டத்தின் (உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம் முன்பாக வலியுறுத்தப்பட்டபடி) பிரிவு *60*-இன்படி நடவடிக்கை ஏதும் எடுப்பதிலிருந்து காப்புரிமையளிப்பது குறித்தும் பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக காலந்தாழ்ந்து முன்வைக்கப்பட்ட வாதங்கள் முற்றிலும் சாரமற்றிருப்பதாகச் சொல்லமுடியாது என நாங்கள் கருத்துரைக்கிறோம். அவ்வாதங்கள் விசாரணை நிலையில் வலியுறுத்தப்படவில்லை என்னும் காரணத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் வழக்கு நிராகரிக்கப்பட்டிருக்கவில்லை, ஆனால், குறிப்பிடப்பட்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, இந்த அம்சங்களைப் பொறுத்த முதல்நோக்கு கருத்துரைகள் அளிக்க நாங்கள் வற்புறுத்தப்படுவதாகவே உணருகிறோம்.

12.1. மேல்முறையீட்டாளரின் வழக்குப்படி, பிரச்சினைக்குரிய நிலம் தொடர்பாக *20.3.1978*-ஆம் தேதியிடப்பட்ட இரண்டாவது குத்தகை ஆவணம் மடத்தால்

25 ஆண்டு காலத்திற்கு அதன்சார்பாக நிறைவேற்றப்பட்டது. சமய நிறுவனம் எதற்கும் சொந்தமான அசையாச்சொத்து எதனையும் பரிமாற்றம் செய்தல், விற்பனை அல்லது அடைமானம் மற்றும் 5 ஆண்டு காலத்திற்கு மிகாமல் குத்தகை ஏதும் விடுதல் ஆகியவை அந்நிறுவனத்திற்கு அவசியமானதாகவோ, பயனுள்ளதாகவோ இருக்குமெனில், ஆணையரால் ஒப்பளிக்கப்படாவிட்டால், அது முற்றிலும் செல்லாததாகிவிடும் என 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்தின் பிரிவு 34[12]-இன் தன்னிலை விளக்க வகையங்கள் தெரிவிக்கின்றன. ஒப்பளிப்பதற்கு முன்பாக, திட்டமிடப்பட்ட நடவடிக்கை

---

12. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்தின் பிரிவு 34-இன் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:-

> "34. **அறக்கட்டளையின் அசையாச் சொத்தின் உடைமை மாற்றம்.**- (1) சமய நிறுவனம் எதற்கும் சொந்தமான அல்லது அதன் நோக்கங்களுக்காக கொடையளிக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட அசையாச் சொத்து எதனையும், பரிமாற்றம் செய்தல், விற்பனை அல்லது அடைமானம் மற்றும் ஐந்து ஆண்டு காலத்திற்கு மிகாமல் குத்தகை ஏதும் விடுதல் ஆகியவை அந்நிறுவனத்திற்கு அவசியமானதாகவோ, பயனுள்ளதாகவோ இருக்குமெனில், அது ஆணையரால் ஒப்பளிக்கப்படாவிட்டால், முற்றிலும் செல்லாததாகிவிடும்:
>
> வரம்புரையாக, அத்தகைய ஒப்பளிப்பு அளிக்கப்படும் முன்பு, திட்டமிடப்பட்ட நடவடிக்கை குறித்த ஆட்சேபணைகளையும், கருத்துரைகளையும் வரவேற்று அது தொடர்பான விவரங்களை வகுத்துரைக்கப்படலாகும் அம்முறையில் வெளியிடவேண்டும்; மேலும் அறங்காவலரிடமிருந்தோ, அக்கறைகொண்ட மற்றவர்களிடமிருந்தோ பெறப்படும் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துரைகள் அனைத்தும் ஆணையரால் உரியமுறையில் பரிசீலிக்கப்படவேண்டும்.
>
> மேலும் வரம்புரையாக, ஆணையர், அரசின் முன்ஒப்பளிப்பின்றி அத்தகைய ஒப்பளிப்புக்கு இசைவளிக்கக்கூடாது.
>
> **விளக்கம்:** மேற்குறிப்பிடப்பட்ட சொத்தின் குத்தகை எதுவும் ஐந்தாண்டு காலங்களுக்கு மிகாமலிருந்தாலும், அது மேற்கொண்டு ஓராண்டு காலத்திற்கு (மொத்தமாக ஐந்தாண்டுகளுக்கு மேலாக இருப்பதைப் பொறுத்து) புதுப்பிப்பதற்கான வகையத்தைக் கொண்டிருக்குமானால், நிபந்தனை எதற்கும் உட்பட்டோ, இல்லாமலோ ஐந்தாண்டுகளுக்கு மேலானதொரு காலத்திற்கான குத்தகையாகக் கருதப்படும்.
>
> *** *** ***"

தொடர்பான ஆட்சேபணைகளையும், கருத்துரைகளையும் வரவேற்கையில் அதற்கான விவரங்கள் வெளியிடப்படவேண்டும். அறங்காவலரிடமிருந்தும் அல்லது அக்கறைகொண்ட மற்ற நபர்கள் எவரிடமிருந்தும் பெறப்படும் ஆட்சேபணைகளையும், கருத்துரைகளையும் பரிசீலிக்கவேண்டும் எனவும் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்தின் மேற்படி பிரிவு 34-இன் முதல் வரம்புரை வேண்டுறுத்துகிறது. இவ்வழக்கில் இரண்டாவது குத்தகைக்கு ஆட்சியர் பரிந்துரைத்திருந்ததால், அதற்கு சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி பெறப்பட்டதாக வா.சா.1-ஆல் ஒரு தெளிவற்ற கூற்று உரைக்கப்பட்டது, ஆனால் அதற்குப்பின், அத்தகைய அனுமதி/ஒப்பளிப்பு எதற்கும் ஆவணச்சான்று எதுவும் அளிக்கப்பட்டுள்ளதாகவோ, முன்மொழியப்பட்ட ஒப்பளிப்பு உரியமுறையில் வெளியிடப்பட்டு, ஆட்சேபணைகள்/கருத்துரைகள் வரவேற்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதாகவோ எதுவுமில்லை. இரண்டாவது குத்தகை ஆவணத்தின் செல்லுந்தன்மையின்போில் தேவையான சான்று இல்லை என்பதற்காக, வாதி-மேல்முறையீட்டாளர் மேற்படி குத்தகை ஆவணத்தின்படி, பிரச்சினைக்குரிய நிலத்தில் உரிமை ஏதும் குறைந்தபட்சம் மாநில அரசிடமிருந்து நட்டஈட்டினைக் கோரும் உரிமையையாவது அடைந்துவிட்டதெனில் முதல்நோக்கிலேயே இது கடுமையாக எதிர்த்துரைக்கத்தக்கதெனத் தெரிகிறது. வழக்கின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, நாங்கள் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்தின் பிரிவு 34-இன் செயல்விளைவுக்குத் தொடர்பான இந்த அம்சத்தை அப்படியே விட்டு, முக்கியமாக மேற்படி குத்தகை ஆவணம் மற்றவகையாக அனுமதிக்கத்தகாதது என்று நாங்கள் நிறைவடைந்தாலும் இந்த எதிர்க்கத்தக்க இரண்டாவது குத்தகையின் அடிப்படையிலுங்கூட எவ்வாறாயினும், வாதி-மேல்முறையீட்டாளருக்கு நட்டஈடு கோரிக்கைக்கு உரிமை ஏதுமில்லை.

12.2. இரண்டாவதாக, *1972*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *60*[13]-இன்படி, *1972*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் நம்பிக்கையின்போில் எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பான உரிமையியல் வழக்கு எதுவும் நிலைக்கத்தக்கதன்று. இந்த அம்சம் பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக குறிப்பிட்டு வாதுரைக்கப்படாதபோதிலும், அதுகுறித்த பிரச்சினை எதுவும் வந்தபோதிலும், *1972*-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *60*-இன் முகப்பிலேயே எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசுக்கு எதிராக இத்தன்மையான நடவடிக்கை ஏதும் நிலைநிறுத்தக்கூடியதென்றால், அதற்கு முதல்நோக்கிலேயே எங்களுக்கு தனிச்சிறப்புரிமைகள் உள்ளன. அவ்வாறிருக்கையில், கருத்துரைக்கப்-பட்டவாறு, நாங்கள் இறுதியாக இந்த அம்சங்களின்போில் தீர்ப்புக் கூறாமல், அவற்றை அப்படியே விட்டுவிடுகிறோம்.

13. இவ்வழக்கின் தீர்மானத்திற்கான முக்கிய கூறுகளை எடுத்துக்கொண்டால், பிரச்சினைக்குரிய உரிமை வழக்கு காலவரையறைத் தடைக்காக தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகும், ஆனால் மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக இப்பிரச்சினை

---

13. 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *60*-இன் தொடர்புடைய பகுதிகள் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:-

> *"60.* **நன்னம்பிக்கையின் அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.-** *(1)* இச்சட்டத்தின் கீழ் நன்னம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படும் அல்லது செய்ய திட்டமிடப்படும் எதற்கும் மைய அரசு அல்லது மாநில அரசு அதிகாரி அல்லது மற்ற ஊழியர் எவர் மீதும் உரிமை வழக்கிட, வழக்குத் தொடுக்க அல்லது வேறு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதலாகாது.
>
> *(2)* இச்சட்டத்தின் கீழ் நன்னம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படும் அல்லது செய்ய திட்டமிடப்படும் எதனாலும் ஏற்படுத்தப்படும் அல்லது ஏற்படக்கூடிய இழப்பு எதற்கும், மைய அரசு அல்லது மாநில அரசு அல்லது அதன் அதிகாரிகள் அல்லது மற்ற ஊழியர்கள் எவர் மீதும் உரிமை வழக்கிட, வழக்குத் தொடுக்க அல்லது வேறு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதலாகாது.
>
> *** *** ***"

தீர்மானிக்கப்பட்டதன் காரணமாகவும், உரிமை வழக்கு தகுதியின் அடிப்படையில் தள்ளுபடியானதன் காரணமாக நீதியர் ஈராயம் அதற்கு விடையளிக்காமல் விட்டுவிட்டதாலும் மேல்முறையீட்டாளரால் நட்டஈட்டுக்கான கோரிக்கையின் தகுதியினடிப்படையில் விரித்துரைத்த பிறகுதான், காலவரையறை என்ற பிரச்சினையை பின்னிட்டு விவாதிப்பது உகந்ததெனத் தெரிகிறது.

மேல்முறையீட்டாளராலான நட்டஈடு கோரிக்கை-நிலைநிறுத்தத்தக்கதா?

14. நட்டஈட்டுக்கான மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிலைநிறுத்தத்தக்கதா? என்பது குறித்த அம்சத்தையும், உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்தது சரியன்று என்பதையும் தீர்மானிக்கும்பொருட்டு ஒரு காப்பிடம் குறித்து அறிவிக்கும் செயல்முறை மற்றும் அந்த நோக்கத்திற்காக நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் தொடர்புடைய வகையங்களின் விளைவு மற்றும் செயல்பாடு தொடர்பான ஒரு சில அடிப்படைப் பிரச்சினைகள் விவாதிக்கப்படவேண்டும் என்பதாகும்.

1972-ஆம் ஆண்டு சட்டத்தின் தொடர்புடைய வகையங்கள்

15. இவ்வழக்கில் அடங்கியிருக்கும் அடிப்படைக் கேள்விகளைப் பொறுத்தவரையில், 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் அத்தியாயம் IV-இல் அடங்கியுள்ள வகையங்கள், வழக்குப்பொருளின் மீது நேரடி விளைவைக் கொண்டிருப்பதால் அது விரிவானபொருளில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்; அதிலுள்ள தொடர்புடைய திருத்தங்களும் கவனிக்கப்படவேண்டும். சட்டத்தின் IV-ஆம் அத்தியாயம் முன்னதாக "காப்பிடங்கள்", "தேசிய பூங்காக்கள்" மற்றும் "கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள்" என்ற தலைப்புகளைக் கொண்டுள்ளதோடு மூன்று துணை தலைப்புகளான "காப்பிடங்கள்",

"தேசிய பூங்காக்கள்" மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள்"[14] ஆகியவற்றின் கீழ் வகையங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய காலகட்டத்தில் அதாவது, 6.3.1976 மற்றும் 28.8.1978-ஆம் தேதியிடப்பட்ட இரு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன, "காப்பிடங்கள்" என்ற துணை தலைப்புகளின் கீழ் 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவுகள் 18 முதல் 24 வரை, 27 மற்றும் 28-இல் உள்ள வகையங்களை நாங்கள் இம்மேல்முறையீட்டில் மிகப்பெரும் அளவில் தொடர்புபடுத்தியுள்ளோம், அவை கீழ்க்கண்டவாறு:-

> "18. **காப்பிடத்தை அறிவித்தல்:-** (1) மாநில அரசு, வன உயிரினங்களை அல்லது அதன் சுற்றுப்புறச் சூழலைப்[15] பாதுகாத்து, தழைக்கச்செய்து அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஏதேனுமொரு பகுதி உயிரின வாழ்க்கைச்சூழல், தாவரங்கள், விலங்குகள், புவியியலமைப்பு, இயற்கை அல்லது விலங்கியல் சார்ந்தவற்றில் போதியளவில் வளம் நிறைந்ததாக

---

14. முதன்மை தலைப்பு, சட்ட எண் 16/2003-ஆல் மாற்றீடு செய்யப்பட்டு, தற்போது அது "பாதுகாக்கப்பட்ட பகுதிகள்" எனக் கூறப்படுகிறது.

15. பிரிவு 18(1)-இல் அடங்கியுள்ள வகையங்கள் 2.10.1991-லிருந்து அமலுக்கு வந்த சட்ட எண் 44/1991-ஆல் திருத்தப்பட்டது. பிரிவு 18(1)-இன் திருத்தப்பட்ட வகையங்கள் பின்வருமாறு:-

> "18. **காப்பிடத்தை அறிவித்தல்.-** (1) மாநில அரசு, ஒதுக்குக் காடு அல்லது நாடுசார்ந்த கடற்பகுதி எதற்குள்ளும் அடங்கியுள்ள பகுதியைத் தவிர வேறேதேனும் பகுதி, வன உயிரினங்களை அல்லது அதன் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து, தழைக்கச்செய்து அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக, உயிரின வாழ்க்கைச்சூழல், தாவரங்கள், விலங்குகள், புவியியலமைப்பு, இயற்கை அல்லது விலங்கியல் சார்ந்தவற்றில் போதியளவில் வளம்நிறைந்ததாக விளங்குமானால், அப்பகுதியைக் காப்பிடமாக அமைக்கும் அதன் உட்கருத்தை அறிவிக்கை மூலம் அறிவிக்கலாம்."

விளங்குமானால், அப்பகுதியை ஒரு காப்பிடமாக அறிவிக்கை மூலம் அறிவிக்கலாம்.

19. **ஆட்சியர் உரிமைகளைத் தீர்மானித்தல்:-** எந்தப் பகுதியும் காப்பிடமாக[16] அறிவிக்கப்படுகிறபோது, ஆட்சியர், காப்பிடத்தின் வரம்புக்குள் அடங்கியுள்ள நிலத்தில் அல்லது அதன்மீது ஏதேனும் நபர்களின் உள்ளபடியான, இயல்பான மற்றும் பரவலான உரிமைகளை ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டும்.

20. **உரிமைகள் வந்தடைவதற்கான தடை.-** பிரிவு 18-இன் அறிவிக்கை வழங்கிய பின்னர், அவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புடை பகுதிக்குள் அடங்கியுள்ள நிலத்தில், அதன்பேரில் அல்லது அதன்மீது வாரிசுரிமை, விருப்புறுதியாவணம் அல்லது விருப்புறுதியாவணம் எழுதாமல் என்பனவற்றின்படி அல்லாது உரிமை ஏதும் வந்தடையாது.

21. **ஆட்சியரால் பொது அறிவிப்பு செய்யப்படுதல்.-** ஓர் அறிவிக்கை பிரிவு 18-இன் கீழ் வழங்கப்பட்டுள்ளபோது, ஆட்சியர், அதில் அடங்கியுள்ள பகுதியிலுள்ள அல்லது அதன் அருகிலுள்ள ஒவ்வொரு நகரத்தில் மற்றும் கிராமத்தில், வட்டார மொழியில் அதனை வெளியிடவேண்டும், அப்பொது அறிவிப்பில் -

---

16. பிரிவு 19-ம், சட்ட எண் 44/1971-ஆல் திருத்தப்பட்டது மற்றும் திருத்தப்பட்ட பிரிவு 19 பின்வருமாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது:-

> "19. ஆட்சியர் உரிமைகளைத் தீர்மானித்தல்:- எந்தப் பகுதியும் காப்பிடமாக அறிவிக்கப்படுகிறபோது, ஆட்சியர், காப்பிடத்தின் வரம்புக்குள் அடங்கியுள்ள நிலத்தில் அல்லது அதன்மீது ஏதேனும் நபர்களின் உள்ளபடியான, இயல்பான மற்றும் பரவலான உரிமைகளை ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டும்."

(அ) காப்பிடத்தின் அமைப்பிடம் மற்றும் வரம்புகளை எவ்வளவு அணுக்கமாக முடியுமோ, அவ்வளவு அணுக்கத்தில் குறிப்பிடுதல்; மற்றும்

(ஆ) பிரிவு 19-இல் குறிப்பிடப்பட்ட உரிமை எதனையும் கோரி, நபர் எவரும், தேவையான விவரங்களுடன் அவ்வுரிமையின் தன்மையையும், நில பரப்பளவையும், மேலும் அது தொடர்பாக இழப்பீட்டுத் தொகை ஏதுமிருப்பின் அதன் விவரங்களையும் குறிப்பிட்டு, வகுத்துரைக்கப்படும் முறையிலான ஓர் எழுத்துப்பூர்வ கோரிக்கையை, அத்தகைய பொது அறிவிப்பு நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மாவட்ட ஆட்சியர் முன்பாக தாக்கல் செய்ய வேண்டுறுத்தப்படுகிறார்.

22. **ஆட்சியரால் செய்யப்படும் விசாரணை.-** ஆட்சியர், கோருரிமையாளருக்கு வகுத்துரைக்கப்படும் அறிவிப்பினை அனுப்பிய பிறகு-

(அ) பிரிவு 21-இன் கூறு (ஆ)-இன் கீழ் அவருக்கு முன்பாக தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை; மற்றும்

(ஆ) பிரிவு 21-இன் கூறு (ஆ)-இன் கீழ் கோரப்படாத, பிரிவு 19-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை ஏதும் நடைமுறையிலுள்ளதைக் குறித்து விரைந்து

விசாரிக்கவேண்டும், இதனைப் பொறுத்தவரையில் இது மாநில அரசின் ஆவணங்களிலிருந்தும், அதனுடன் பரிச்சயமான நபர் எவருடைய சான்றிலிருந்தும் உறுதிப்படுத்திக்- கொள்ளலாம்.

23. **ஆட்சியரின் அதிகாரங்கள்.-** அத்தகைய விசாரணை நோக்கத்திற்காக, ஆட்சியர் பின்வரும் அதிகாரங்களைச் செலுத்தலாம், அதாவது:-

(அ) ஏதேனும் நிலத்தில் நுழைந்து, அந்நிலத்தினை அளவீடு செய்து, எல்லையைக் குறித்து, அதனுடைய வரைபடத்தைத் தயார்செய்யும் அதிகாரம் அல்லது அவ்வாறு செய்வதற்கு வேறேதேனும் அலுவலருக்கு அதிகாரமளித்தல்;

(ஆ) உரிமை வழக்குகளை விசாரிக்கும் உரிமையியல் நீதிமன்றத்தில் அடைவுற்றுள்ள அதே அதிகாரங்களைப் போன்றதாகும்.

24. **உரிமைகளைப் பெறுதல்.-** (1) பிரிவு 19-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் எதனிலும் அல்லது எதன்மீதுமான உரிமைக்கோரும் நேர்வில், ஆட்சியர், அதனை முழுவதுமாகவோ, பகுதியாகவோ அனுமதித்து அல்லது நிராகரித்து ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

(2) அத்தகைய கோரிக்கை முழுவதுமாகவோ, பகுதியாகவோ அனுமதிக்கப்படுமாயின், ஆட்சியர்-

(அ) திட்டமிடப்பட்ட காப்பிட எல்லையிலிருந்து அந்நிலத்தை நீக்குதல், அல்லது

(ஆ) அந்நிலத்தின் உரிமையாளர் அல்லது உரிமைகளைக் கொண்டிருப்பவருக்கும் உரிமையாளர் அல்லது அவ்வுரிமைகளைக் கொண்டிருக்கும் அரசுக்குமிடையேயான ஓர் உடன்படிக்கை மூலம், அந்நிலத்தில் அல்லது அதன்மீதான உரிமைகளை அரசுக்கு விட்டுக்கொடுக்க ஒப்புக்கொள்ளுகிறவிடத்தல்லாமல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1894 (1/1894)[17] மெய்ப்பிக்கப்பட்டவாறாக அத்தகைய இழப்பீட்டினைச் செலுத்துவதன்பேரிலல்லாமல், அத்தகைய நிலம் அல்லது உரிமைகளைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்தல் என ஏதேனுமொன்றைச் செய்யலாம்.

*** *** ***

27. **காப்பிடத்தில் நுழைவதற்கான தடை.-** (1)(அ) பணியின்பேரில் உள்ள அரசு ஊழியர்,

---

17. மேற்படி திருத்தச் சட்ட எண் 44/1991-இன் வாயிலாக துணைக் கூறு (இ) பிரிவு 24-உடன் சேர்க்கப்பட்டது பின்வருமாறு:-

"(இ) காப்பிட எல்லைக்குள் அமைந்திருக்கும் நிலம் எதிலும் அல்லது எதன்மீதுமான உரிமையை நபர் எவரும் தொடருவதை தலைமை வன விலங்குகள் காப்பாளருடன் கலந்தாலோசித்து அனுமதிக்கலாம்."

(ஆ) காப்பிட எல்லைக்குள் வசிக்க தலைமை வன விலங்குகள் காப்பாளரால் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் அனுமதிக்கப்பட்டுள்ள நபர்,

(இ) காப்பிட எல்லைக்குள் அசையாச் சொத்தின் மீது உரிமையேதும் கொண்டுள்ள நபர்,

(ஈ) பொது நெடுஞ்சாலையோடு அமைந்த காப்பிடத்தின் வழியாகச் செல்லும் நபர், மற்றும்

(உ) கூறு (அ), கூறு (ஆ) அல்லது கூறு (இ)-இல் குறிப்பிடப்பட்டுள்ள நபரைச் சார்ந்திருப்போர் ஆகியோரைத் தவிர, வேறுநபர் எவரும்,

பிரிவு 28-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதி நிபந்தனைகளின் கீழும் அதற்கிணங்கவும் தவிர, காப்பிடத்தில் நுழையவோ, வசிக்கவோ கூடாது.

(2) ஒவ்வொரு நபரும் அவர் காப்பிடத்தில் வசிக்கும்வரையில்-

(அ) இச்சட்டத்திற்குப் புறம்பாக காப்பிடத்தில் நடக்கும் குற்றத்தைத் தடுத்தல்;

(ஆ) இச்சட்டத்திற்குப் புறம்பாக அத்தகைய குற்றம் எதுவும் அக்காப்பிடத்தில் புரியப்பட்டிருக்கிறது என நம்புவதற்குரிய காரணம் இருக்குமிடத்து, குற்றவாளியைக் கண்டுபிடித்து, கைது செய்வதற்கு உதவுதல்;

(இ) வன விலங்கு ஏதும் இறந்துவிட்டால் அதனைத் தெரிவித்தல் மற்றும் தலைமை வன விலங்கு காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அதன் எச்சங்களை பொறுப்பிலெடுத்துக்கொள்ளும்வரையில் அவற்றைப் பாதுகாத்தல்;

(ஈ) அக்காப்பிடத்தில் தீப்பற்றிக் கொண்டதைக் குறித்து அறிந்தாலோ அல்லது தகவலறிந்தாலோ, அக்காப்பிடத்திலுள்ள தீயை அணைத்தல் மற்றும் அக்காப்பிடத்திற்குள் பார்வைக்கெட்டிய இடத்தில் தீப்பற்றிக்கொண்டதைக் குறித்து அறிந்தாலோ அல்லது தகவலறிந்தாலோ, அவரது அதிகாரத்திற்குட்பட்ட சட்டப்படியான வழிமுறைகளின் மூலம் தீ பரவாமல் தடுத்தல்; மற்றும்

(உ) இச்சட்டத்திற்கு புறம்பாக குற்றம் ஏதும் புரியப்படுவதைத் தடுப்பதற்காகவோ அல்லது அக்குற்றம் எதனையும் புலனாய்வு செய்வதிலோ[18] அவரது உதவியைக் கோரும்

---

18. மேற்படி சட்ட எண் 44/1991-இன்படி, உட்பிரிவு (3) மற்றும் உட்பிரிவு (4), பிரிவு 27-இல் இடைச்செருகப்பட்டன, அது கீழ்க்கண்டவாறு:-

"(3) ஒரு காப்பிடத்தின் எல்லைக் குறியீடு எதற்கும் சேதம் விளைவிக்கும் அல்லது இந்திய தண்டனைச் சட்டம், 1860 (45/1860)-இல் பொருள் வரையறுக்கப்பட்டவாறு முறைகேடான ஆதாயம்பெறும் உட்கருத்துடன் நபர் எவரும் அத்தகைய எல்லைக் குறியீட்டை மாற்றவோ, அழிக்கவோ நகர்த்தவோ அல்லது சிதைக்கவோ கூடாது.

(4) நபர் எவரும் வன விலங்கு எதனையும் தொல்லை அல்லது தொந்தரவு செய்யவோ அல்லது காப்பிடங்களில் குப்பைக்கொட்டவோ கூடாது."

வன அலுவலர், தலைமை வன விலங்குகள் காப்பாளர், வன விலங்குகள் காப்பாளர் அல்லது காவல்துறை அலுவலர் எவருக்கும் உதவிபுரிதல்

ஆகியவற்றுக்கு கடப்பாடுடையவராவார்.

28. **அனுமதி வழங்கல்.-** (1) தலைமை வன விலங்குகள் காப்பாளர், பின்வரும் நோக்கங்கள் அனைத்திற்கும் அல்லது ஏதேனும் ஒன்றுக்காக காப்பிடத்தில் நுழைய அல்லது தங்குவதற்கு நபர் எவருக்கும் விண்ணப்பத்தின்பேரில் அனுமதி வழங்கலாம், அதாவது:-

(அ) வன விலங்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணை அல்லது தற்செயலான நோக்கங்கள் குறித்து ஆராயவும் அல்லது ஆய்வு செய்யவும்;

(ஆ) புகைப்படம் எடுக்கவும்;

(இ) அறிவியல் ஆராய்ச்சி செய்யவும்;

(ஈ) சுற்றுலா செல்லவும்;

(உ) காப்பிடத்தில் வசித்துவரும் நபர் எவருடனும் சட்டப்படியாக தொழில் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

(2) ஒரு காப்பிடத்தில் நுழைய அல்லது வசிப்பதற்கான அனுமதி, அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டும், நிர்ணயிக்கப்படலாகும்

அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன்பேரிலும் வழங்கப்பட வேண்டும்."

15.1. திருத்தப்படும் சட்டமான சட்ட எண் 44/1991-ஆல் ஒருசில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, காப்பிடத்தை அறிவிக்கும் செயல்முறையை சிறிதளவு மாற்றப்பட்டதன் விளைவினைக் கொண்டுள்ளது என்பது உடனடியாகக் கவனிக்கப்படலாம். மேற்படி திருத்தத்திற்கு முன்னதாக, 1972-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 18(1)-இன் கீழான அறிவிக்கை, ஒரு பகுதியைக் காப்பிடமாக அறிவிப்பதாகும், அவ்வாறிருக்கையில், திருத்தத்திற்குப் பிறகு பிரிவு 18(1)-இன் கீழான அறிவிக்கை, ஒரு பகுதியைக் காப்பிடமாக அமைக்கும் மாநில அரசின் உட்கருத்தினை அறிவிப்பதாகும். இருப்பினும், உரிமைகளைத் தீர்மானிக்கும் ஆட்சியரின் அதிகாரங்கள்; பிரிவு 18-இன் கீழ் அறிவிக்கை வழங்கிய பிறகு உரிமைகள் வந்தடைவதன்மீதான தடை; ஆட்சியரால் பொது அறிவிப்பு செய்யப்படுதல்; ஆட்சியரால் விசாரணை செய்யப்படுதல் மற்றும் விசாரணையின் நோக்கத்திற்காக ஆட்சியரின் அதிகாரங்கள் தொடர்பான சட்டத்திட்டத்தின் வகையங்களின் எஞ்சிய பகுதிகள் இன்றியமையாதளவில் அப்படியே உள்ளன.[19-20]

---

19. ஒரு காப்பிடமாக அறிவிக்கப்படும் செயல்முறை திட்டத்தை மாற்றியமைப்பதைக் கருத்திற்கொண்டுப் பார்த்தால், இதன்படி, திருத்தத்திற்குப் பிறகு, பிரிவு 18-இன் கீழான அறிவிக்கை அரசின் உட்கருத்தின்படியான அறிவிப்பு மட்டுமேயாகும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதென்றாலும், பிரிவு 18-இன் கீழ் அறிவிக்கை வழங்கிய பிறகு, இன்றியமையாதளவில், கோருரிமைகள் ஏதுமிருப்பின் அவை தீர்வு செய்யப்பட்ட பிறகு, ஒரு பகுதியைக் காப்பிடமாக அறிவிப்பதற்கு வகைசெய்யும் வகையில், வகையங்கள், பிரிவு 26-அ-இன் மூலமாக 1972-ஆம் ஆண்டு சட்டத்தில் இடைச்செருகப்பட்டன. தற்போதைய நோக்கத்திற்கு பிரிவு 26-அ (வரம்புரையையும், இதர உட்பிரிவுகளையும் தவிர்த்து) உட்பிரிவு (1)-இன் முதன்மை பகுதியைக் கருத்திற்கொள்வது போதுமானது, அது கீழ்க்கண்டவாறு:-

1972-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *20*-இன் செயல்பாடும், விளைவும்

16. 1972-ஆம் ஆண்டு சட்டத்திட்டத்தில், அதனுடைய பிரிவு *18*-இன் கீழ் ஓர் அறிவிக்கையின் வெளியீடு, விருப்புறுதியாவணம் அல்லது விருப்புறுதியாவணமின்றி மரபுரிமையின் (அதே சட்டத்தின் பிரிவு *20*-ஐ காண்க) வாயிலாக அல்லாது அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் எல்லைக்குள் அடங்கியுள்ள நிலத்தில்

"**26-அ. ஒரு பகுதியைக் காப்பிடமாக அறிவித்தல்.-** *(1)* -

(அ) பிரிவு *18*-இன் கீழ் ஓர் அறிவிக்கை வழங்கப்பட்டு, கோருரிமைகளை முன்கொணர்வதற்கான காலம் காலாவதியாகிவிட்டால், ஒரு காப்பிடமாக அறிவிக்கப்பட திட்டமிடப்பட்ட ஒரு பகுதியிலுள்ள நிலம் எதன் தொடர்பாகவும் செய்யப்படும் கோருரிமைகள் ஏதுமிருப்பின் அவையாவும் மாநில அரசால் தீர்வு செய்யப்பட்டுள்ளபோது; அல்லது

(ஆ) ஒதுக்குக் காட்டுக்குள் அடங்கியுள்ள பகுதி எதுவும் அல்லது நாடுசார்ந்த கடற்பகுதி எதுவும், மாநில அரசால், வன உயிரினங்களை அல்லது அதன் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து, தழைக்கச் செய்து அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக, உயிரின வாழ்க்கைச்சூழல், தாவரங்கள், விலங்குகள், புவியியலமைப்பு, இயற்கை அல்லது விலங்கியல் சார்ந்தவற்றில் போதியளவில் வளம் நிறைந்ததாக கருதப்படுமானால், அது ஒரு காப்பிடத்தில் சேர்க்கப்படுகிறபோது

மாநில அரசு, காப்பிடத்திற்குள் அடங்கியிருக்கும் பகுதியின் எல்லைகளைக் குறிப்பிட்டு ஓர் அறிவிக்கையை வெளியிட்டு, அப்பகுதி, அறிவிக்கையில் குறிப்பிடலாகின்ற நாளன்றோ அல்லது அந்த நாளிலிருந்தோ காப்பிடமாக இருந்துவரும்:

*** *** ***

20. சட்ட எண் *16/2003*-இன் மூலமாக IV-ஆவது அத்தியாயத்தில் உள்ள இவ்வகையங்களின் திட்டத்தில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன, அதாவது பிரிவுகள் *18*-அ மற்றும் *18*-ஆ இடைச்செருகப்பட்டுள்ளன, இவை காப்பிடங்களைப் பாதுகாக்கவும், ஆட்சியர்களை நியமிக்கவும் வகைசெய்கின்றன; பிரிவு *19*-இன் கீழான பொது அறிவிப்பு, தற்போது பிரிவு *18*-இன் கீழான அறிவிக்கை வெளியிடுவதிலிருந்து அறுபது நாட்களுக்குள் வெளியிடப்படுவதற்கு வேண்டுறுத்துகிறது; பிரிவு *18*-இன் கீழான அறிவிக்கை நாளிலிருந்து இரண்டாண்டுகளுக்குள் பிரிவு *19* முதல் *25*-இன் கீழான நடவடிக்கைகளை நிறைவுசெய்வதை வகைசெய்து பிரிவு *25*-அ-ம் இடைச்செருகப்பட்டுள்ளது; உட்பிரிவு *(3)*, பிரிவு *26*-அ-இல் பதிலீடு செய்யப்பட்டுள்ளது; மற்றும் தலைமை வனவிலங்குகள் காப்பாளரால் வழங்கப்படும் அனுமதிக்கிணங்கவும், அதன்கீழாக அல்லாது, ஒரு காப்பிடத்திலிருந்து வன விளைபொருள் உட்பட வன உயிரினம் எதனையும் அழித்தல், சுரண்டுதல் அல்லது இடம்பெயர்த்தல் ஆகியவற்றை தடைசெய்யும் பிரிவு *29*-ம் பதிலீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வகையங்கள், கையிலுள்ள வழக்குக்குப் பொருந்தாதிருப்பதால் விரிவாகக் கூறப்படவேண்டியதில்லை.

உரிமை எதனையும் பெறுவதைத் தடைசெய்யும் சிறப்பியல்பையும், முனைப்பான விளைவினையும் கொண்டுள்ளது என்பதில் சந்தேகத்தின் நிழல்கூட இல்லை. மேல்முறையீட்டாளருக்கு பிரச்சினைக்குரிய நிலம் 1.7.1972-லிருந்து 5 ஆண்டு கால குத்தகையின்பேரில் கொடுக்கப்பட்டிருந்தாலுங்கூட, அக்காலம் 30.6.1977 அன்று முடிவுக்கு வந்துவிட்டது. குத்தகைக் காலம் முடிவடையும் இந்த நாளன்று, மறுப்புக்கிடமின்றி 6.3.1976 அன்று வெளியிடப்பட்ட பிரிவு 18(1)-இன் கீழான அறிவிக்கை செயல்பாட்டிலிருந்தது, மேலும் வழக்கு நிலம், மேற்படி அறிவிக்கையில்[21] சேர்க்கப்பட்டுவிட்டது என்பது மேல்முறையீட்டாளரின் திட்டவட்டமான கூற்றாக இருந்தது. அவ்வாறான நிலையிலிருப்பதால், மேல்முறையீட்டாளருக்கு, 30.6.1977 அன்று அவரது குத்தகைக் காலம் காலாவதியான பிறகு, பிரச்சினைக்குரிய நிலத்தில் மேற்கொண்டு உரிமை எதனையும் பெறுவதற்கான வாய்ப்பே இல்லை. இக்காரணத்திற்காகத்தான், 20.3.1978 அன்று மேல்முறையீட்டாளரின் சார்பாக நிறைவேற்றப்பட்டிருப்பதாக சொல்லப்படும் இரண்டாவது குத்தகை ஆவணத்தால் பயனேதுமில்லை என நாங்கள் தெளிவாகவே கருதுகிறோம். அதாவது, பிரிவு 18(1)-இன் கீழான அறிவிக்கை (இது, மேல்முறையீட்டாளரின் சுய கூற்றின்படி, பிரச்சினைக்குரிய நிலத்தைச் சேர்த்துக்கொண்டது) 6.3.1976 அன்று வெளியிடப்பட்டிருப்பதால், பிரச்சினைக்குரிய நிலத்தில் மரபுரிமைப்படி அல்லாது உரிமை ஏதும் பெறப்பட்டிருக்கமுடியாது, ஆகவே, 6.3.1976-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி அறிவிக்கையின்படி உள்ளடக்கப்பட்டுள்ளதாகச்

---

21. பிரதிவாதியான எதிர்மேல்முறையீட்டாளர், வழக்குநிலம் சட்டத்தின் பிரிவு 18(1)-இன் கீழான மேற்படி அறிவிக்கையில் சேர்க்கப்படவில்லை எனக் கருத்துரைக்க உறுதியற்ற முயற்சி செய்திருந்தபோதுங்கூட, அது அவ்வாறு சேர்க்கப்பட்டு, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை உட்பட ஒட்டுமொத்த வழக்கும், உண்மையிலேயே அதில் சேர்க்கப்பட்டதன் அடிப்படையில் மேல்நடத்தப்பட்டது.

சொல்லப்படும் வழக்கு நிலத்தில் மேல்முறையீட்டாளரால் பெறப்படும் உரிமை எதுவும் முற்றிலும் பொருத்தமற்றதாகும்.

16.1. 20.3.1978-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி இரண்டாவது குத்தகையின் கீழ் மேல்முறையீட்டாளர் உரிமையேதும் பெறவில்லை, குறைந்தபட்சம் மாநில அரசுக்கு எதிராகவும் உரிமையேதும் பெறவில்லை எனக் கண்டறியப்பட்டாலே எங்களுடைய கருத்தில், மேல்முறையீட்டாளரின் வழக்கின் முழுமையான அடிப்படையும் தகர்ந்துவிடுகிறது என்பதாகும். முந்தைய வழக்குகள் அனைத்திலும், முதலில் காப்பிடத்திலிருந்து பிரச்சினைக்குரிய நிலத்தை நீக்கக் கோரியதும்; பின்னர் அதனைச் சேர்க்கக் கோரியதும்; அதற்குப்பின் அதனைச் சேர்த்ததற்கான இழப்பீட்டைக் கோரியதும்; பின்னர் அதனை நீக்கியதற்கு எதிர்த்துரைத்தும், மடம் ஒரு தீவிர பங்கேற்பாளராக இருந்துவந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். உள்ளபடியே, நிலத்தை நீக்கியது குறித்து எதிர்த்துரைத்து, இறுதி மனு மடத்தாலும், மேல்முறையீட்டாளராலும் கூட்டாகத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும், மடம், உரிமை வழக்கில் நட்டஈட்டுக்கான கோரிக்கையில் சேர்ந்துகொள்ளவில்லை. குறிப்பிடப்படும் இரண்டாவது குத்தகையால் பயனேதுமில்லை, மேலும், அதன்கீழ் மேல்முறையீட்டாளர் உரிமையேதும் பெற்றிருந்ததில்லை என்னும் காரணத்திற்காக, 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட நீக்கல் உத்தரவின் அடிப்படையிலானதாகச் சொல்லப்படும் வழக்குமூலம் தொடர்பாக நட்டஈடு கோருவது எதுவாயினும் அதற்கு மேல்முறையீட்டாளர் உரிமையேதும் கொண்டிருக்கவில்லை என்பதில் எங்களுக்கு ஐயமேதுமில்லை. இதை நாங்கள் இன்னமும் வேறுவிதமாகச் சொல்லவேண்டுமென்றால், 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட நீக்கல் உத்தரவில், மாநில அரசுக்கு எதிராக நடவடிக்கை ஏதும் தொடர

உரிமையளிக்கப்பட்டிருந்தால், மடம் மட்டுமே அத்தகையதொரு நடவடிக்கை தொடரமுடியுமேயன்றி மேல்முறையீட்டாளரல்ல. மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு இக்காரணத்திற்காக மட்டுமே தள்ளுபடி செய்வதற்குரியதாகும்.

மேல்முறையீட்டாளர் உரிமையேதும் கொண்டிருந்தாலுங்கூட அங்கு உரிமைமீறல் ஏதுமில்லை

17. வாதி-மேல்முறையீட்டாளர், இரண்டாவது குத்தகையின் கீழ் உரிமையேதும் பெறவில்லை எனக் கண்டறிந்து, கையிலுள்ள உரிமை வழக்கை இக்காரணத்திற்காக மட்டுமே தள்ளுபடி செய்தலை நிலைநிறுத்த இயலுமெனக் கண்டறிந்தால், நாம் இந்த அம்சத்தை ஒரு கணப்பொழுது தள்ளிவைத்துவிட்டுங்கூட, நட்டஈட்டுக்கான நடவடிக்கை ஒன்றைத் தொடருவதற்கான காரணத்தையளித்தமுறையில், வழக்கு நிலத்தில் மேல்முறையீட்டாளரின் உரிமை (ஏதுமிருப்பின்) மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்த இரண்டாவது வினாவினை ஆராயலாம். தற்போதைய உரிமை வழக்கில் நட்டஈட்டுக்கான கோரிக்கை, எதிர்மேல்முறையீட்டாளர்-மாநில அரசு, அதன் அலுவலர்கள் மூலமாக, மேல்முறையீட்டாளர் வழக்கு நிலத்தில் நுழைந்து அதன் நுகர்வுரிமையை அனுபவிப்பதிலிருந்து தடுத்து, பின்னர் வழக்கு நிலத்தைக் கையகப்படுத்தியதற்கான இழப்பீட்டினை மறுத்து, தாமதமாக காப்பிடத்திலிருந்து அதனை நீக்கியதால் தீங்கிழைக்கப்பட்டு பாதிப்பேற்படுத்தப்பட்டது என்ற கூற்றின் அடிப்படையிலானது என்பது குறிப்பிடத்தக்கது. மேல்முறையீட்டாளரின் அக்கூற்று, உயர் நீதிமன்ற நீதியர் ஈராயத்தால் அதனுடைய 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட மேற்கூறிய தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துரைகளிலிருந்தும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட நீக்கல் உத்தரவை எதிர்த்த மடம் மற்றும் மேல்முறையீட்டாளரின்

கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. எங்களுடைய கருத்தில், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையில் நற்கூறேதுமில்லை என்பதாகும்.

17.1. உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், *26.2.2007*-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையைக் கருத்திற்கொண்டு, வா.சா.*1*-இன் ஏற்புரையின்படி, மேல்முறையீட்டாளரின் உடைமை பறிக்கப்பட்டிருந்ததாக மிகச் சரியாகக் குறிப்பிட்டுள்ளது. நுழைவதற்கான கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில், *1972*-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *27*-இன்படி, காப்பிடத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும் அசையாச் சொத்தின்மீது உரிமைகொண்டிருக்கும் ஒருவர், காப்பிடத்திற்குள் நுழைவதற்கோ, தங்குவதற்கோ தடைசெய்யப்படுவதில்லை. பெரும்பாலும் பிரிவு *27*-இன் உட்பிரிவு *(2)*-இல் குறிப்பிட்டுள்ளபடியான பணிகள் நிறைவேற்றப்படவேண்டியனவாகும். முக்கியமாக காப்பிடத்தையும், அதில் வசிப்பவர்களையும் பாதுகாப்பதற்கு, அத்தகைய பணிகள், சட்டப்படியான உரிமை எதனையும் செலுத்துவதிலிருந்து தடையேதும் விதிப்பதற்கு வழிகோலுவதாகச் சொல்ல இயலாது.

17.2. எங்களுடைய கருத்துப்படி, அசல் உரிமையாளரும், வாதியும் காட்டுக்குள் சென்று, நுகர்பொருட்களைச் சேகரிப்பதிலிருந்து தடைசெய்யப்பட்டனர் என்பதை நிலைநாட்ட பதிவாவணத்தில் எதுவுமில்லை என்று நீதியர் ஈராயம் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் சரியாகவே கருத்துரைத்துள்ளது. பதிவாவணத்திலுள்ள விரிவான சங்கதிகளின்படியும், பொருந்தக்கூடிய சட்டத்தின்படியும், வாதி-மேல்முறையீட்டாளர் அதன் சட்டப்படியான உரிமைகளைச் செலுத்த மாநில அரசால் சட்டத்திற்கு புறம்பான முறையில் தடுக்கப்பட்டது என்று சொல்லமுடியாது. எனவே, நட்டஈட்டுக்கான நடவடிக்கையை மேல்முறையீட்டாளர் தொடருவதற்கு அடிப்படை ஏதுமில்லை எனத் தெரிகிறது.

18. ஐயத்திற்கிடமின்றி மேல்முறையீட்டாளர் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட ஒரு நிகழ்வு இருந்தது. அந்த மறுப்பு 16.11.1976-க்கு வெகுகாலத்திற்கு முன்னதாகவே தெரிவிக்கப்பட்டுவிட்டது, மேலும் 22 ஆண்டுகளாக வருவாய் இழப்பு ஏற்பட்டதாகச் சொல்லப்படுவதற்கான நட்டஈடு கோரிக்கையை நிலைநிறுத்தவும், வழக்குரையிலுள்ள வேண்டுரைகளின்படி வேறு தொகையேதும் கோருவதற்கும் மேல்முறையீட்டாளருக்கு காரணமேதும் அளிக்கமுடியவில்லை. மரங்களை வெட்டுவதற்கான அனுமதி மேற்படி மறுக்கப்பட்டதைப் பொறுத்தவரையிலுங்கூட, அப்பகுதி காப்பிடத்திலிருந்து நீக்கப்பட்டபோதும், அந்த இடத்தில் மரங்கள் இருந்தன. ஆகவே, வாதி-மேல்முறையீட்டாளர் அம்மரங்கள் மீது சட்டப்படியான உரிமை கொண்டிருப்பாரானால், அரசு அலுவலர்களின் நடவடிக்கையால் ஏற்பட்ட ஏதேனும் இழப்பினால் பாதிப்படைந்ததாகக் கூறிவிட இயலாது.

19. இதில் இதற்குமேல் என்ன விவாதிக்கப்பட்டுள்ளதென்றால், இது, மேல்முறையீட்டாளர், எதிர்மேல்முறையீட்டாளர்-அரசுக்கு எதிராக நட்டஈடு கோருவதற்கான வழக்கேயல்ல என நாங்கள் நிறைவடைகிறோம். எனவே சொத்துரிமை மீறல் மற்றும் நட்டஈடு கோரிக்கையைப் பொறுத்தவரையில், இதன்பேரில் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் மேற்கோள் காட்டப்பட்ட பல்வேறு தீர்முடிவுகளை விவாதிக்கத் தேவையில்லையெனத் தெரிகிறது. ஆயினும், 28.5.1987-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தில் ஆட்சியரின் தரப்பிலான ஏற்புரையைப் பொறுத்து வழக்கின் ஒரு அம்சம் ஆராயப்படலாம். முறையான விளக்கமிருந்தாலன்றி ஏற்புரைதான் வழக்காடி ஒருவருக்கு எதிரான சிறந்த சான்று என (மேற்கண்ட) திரு. ஜான், சுஷில் குமார் மற்றும் ஸ்டாண்டர்ட் சார்டர்ட் பேங்க் என்ற வழக்குகளின் அடிப்படைக் கோட்பாடுகளில் மறுப்பேதும் இல்லை. இவ்வழக்கில் பிரதிவாதி-எதிர்மேல்முறையீட்டாளரின் சார்பாக

சான்றேதுமில்லை, 28.5.1987-ஆம் தேதியிடப்பட்ட மேற்கூறிய கடிதம் மறுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் வினாவானது, இக்கடிதத்தின் விளைவு குறித்தேயாகும். எங்களுடைய கருத்துப்படி, துறைகளுக்கிடையேயான முக்கியமான தகவலாக உள்ள அக்கடிதத்தை அதன் முகமதிப்பிலிருந்து பார்த்தாலுங்கூட, அதிலிருந்து அறியவருவது ஒன்றுமேயில்லை, ஏனென்றால் உயர் நீதிமன்றத்தால் சரியாக கருத்துரைக்கப்பட்டவாறு, அசல் உரிமையாளரும், மேல்முறையீட்டாளரும் வழக்கு நிலத்துக்கு உள்ளே செல்வதிலிருந்தும், நுகர்பொருட்களைச் சேகரிப்பதிலிருந்தும் தடுக்கப்பட்டனர் என்பதையும், மேல்முறையீட்டாளர் தனது சட்டப்படியான உரிமையைச் செலுத்தும்வகையில் (மேல்முறையீட்டாளருக்கு அத்தகைய உரிமையேதுமிருப்பின்) மாநில அரசால் ஏதும் சட்டமுறைமையற்ற முறையில் தடுக்கப்பட்டார் என்று கூறிவிடமுடியாது என்பதாகும்.

20. இதில் இதற்கு முன்னர் என்ன விவாதிக்கப்பட்டுள்ளதோ, அதற்கு உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம் இரண்டு முக்கிய வினாக்களான மேல்முறையீட்டாளர் வழக்கு நிலத்தில் உரிமையேதும் கொண்டிருந்ததா? என்பது குறித்தும், அத்தகைய உரிமையேதுமிருந்தால், அதில் உரியமுறையிலும், சட்டத்திற்கிணங்கவும், மேல்முறையீட்டாளருக்கு எதிராக உரிமைமீறல் ஏதுமிருந்ததா? என்பது குறித்தும் உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் சரியாகவே விடையளித்துள்ளதென நாங்கள் நிறைவடைகிறோம். நட்டஈட்டுக்கான தீர்ப்பாணை ஏதும் வழங்குவதற்கான சந்தர்ப்பம் ஏதும் நிறுவப்படவில்லை.

<u>காலவரையறை</u>

21. இவ்வழக்கின் சங்கதிகளின்பேரிலும், சூழ்நிலைகளின்படியும், காலவரையறை குறித்த வினா, பரிசீலனைக்காக இயல்பாகவே எழுகிறது. 1972-ஆம் ஆண்டு சட்டத்தின்

கீழ் எதிர்மேல்முறையீட்டாளரான அரசு அலுவலர்களின் நடவடிக்கைகள் நட்டஈட்டு கோரிக்கையை எழுப்புமேயானால், அத்தகையதோர் உரிமை வழக்குக்கான காலவரையறையை ஓராண்டு என வகைசெய்யும் காலவரையறைச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 72-ஆல் அவ்வழக்கு நேரடியாக உள்ளடக்கப்பட்டுள்ளது, இது, ஒரு செயல் செய்யப்படுகிறபோது அல்லது செய்யாமல் விடப்படுகிறபோது செயல்பட தொடங்குகிறது. காலவரையறைச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 72 கீழ்க்கண்டவாறு:-

இச்சட்டம் செயல்படும் பகுதிகளில் அவ்வப்போது அமலிலுள்ள இயற்றுச்சட்டம் எதனையும் தொடர்ந்து, குறிப்பிட்டதொரு செயலைச் செய்ததற்கான அல்லது செய்யாததற்கான நட்டஈட்டுக்காக	ஓராண்டு	ஒரு செயல் செய்யப்படுகிறபோது அல்லது செய்யாமல் விடப்படுகிறபோது

21.1. (மேற்கண்ட) சல்லா இராமகிருஷ்ண ரெட்டி என்ற வழக்கில், முறையிடப்பட்ட ஒரு செய்கையோ, விடுபாடோ, சட்டப்படியான அதிகாரமைப்பின்படியாக நிறைவேற்றப்படவில்லையெனில், வகுமுறைக்கூறு 72 பொருந்தாது. மேலும், ஓர் அரசு ஊழியர் தனது அலுவலகப் போர்வையின் கீழ் தீயயெண்ணத்துடன் செயல்படுவாரெனில், இந்த வகுமுறைக்கூறு அவரைக் காப்பாற்றாது. இவ்வழக்கில், எந்தவொரு குறிப்பிட்ட அலவலர்/அலுவலர்களின் மீதும் திட்டவட்டமான தீயெண்ணக் குற்றச்சாட்டு ஏதுமில்லையென்றாலும், எதிர்ப்புக்குள்ளான நடவடிக்கை நாளிலிருந்து ஓராண்டு காலவரையறையுடன் வகுமுறைக்கூறு 72 செயல்படும், ஆனால் விவாதத்தின்பொருட்டு, வழக்குத் தொடருவதற்கான உரிமை காலத்திலிருந்து மூன்று ஆண்டுகள் காலவரையறையை வகைசெய்கின்ற மிச்சவுரிமையளிக்கும் வகுமுறைக்கூறு 113 கையிலுள்ள வழக்குக்குப் பொருந்தக்கூடியதென நாம் கருதலாம். மேலும்,

19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு வழக்குத் தொடரும் உரிமையை அளித்ததாகவும் நாம் கருதலாம். அதன்பிறகுங்கூட, 8.6.1998-ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு காலவரையறைக்கு மிகவும் அப்பாற்பட்டதாகும்.

21.2. ஆகவே, மேல்முறையீட்டாளர், காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-ஐயும், 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கருத்துரைகளையும் குறிப்பிட்டு சார்ந்துநின்றது. மேற்படி தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கருத்துரைகளைப் பொறுத்தவரையில், மேற்படி நீதிப்பேராணை வழக்கில் செலவிடப்பட்ட காலம், பிரிவு 14-இன் கீழ் நீக்கப்படும் என உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம் இறுதியாகத் தீர்ப்புரைக்கவும் கூடாது, தீர்ப்புரைக்கவுமில்லை. அத்தகையதொரு காரணம், இழப்பீட்டுக்கான கோரிக்கையில் எழுப்பப்படலாம் என நீதியர் ஈராயம் அதற்கு வெளிப்படையாகவே வாய்ப்பளித்தது. காரணம் எழுப்பப்படுகிறபோது, அதனை, அதனுடைய நற்கூறுகளின்பேரிலேயே ஆராயவேண்டியுள்ளது.

21.3. உரிமை வழக்கில், எழுவினா எண் 2-ஐ விவாதிக்கையில், 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் கருத்துரைகளை, குறிப்பிட்ட காரணத்தினால், கற்றறிந்த தனியமர் நீதியரசர் முற்றிலும் நன்கு ஆராயாமல் செயல்பட்டார், பின்னர் தரப்பினர்களின் வாதங்களை விவாதிக்கையில், கற்றறிந்த நீதியரசர், காரணம் ஏதும் குறிப்பிடாமல் பிரதிவாதியுடன் முரண்பட்டு, உரிமை வழக்கு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற முடிவினைத் தெரிவித்து, நேரடியாக கருத்துரைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குமாறாக, நீதியர் ஈராயம், காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-இன் பொருந்துகையின்பேரில் அதன் முதல்நிலையான ஐயங்களைச் சுட்டிக்காட்டியதேயன்றி, கோரிக்கை நற்கூறுகளின்பேரில் எதிர்மறையாக்கப்பட்டிருந்ததால்,

காலவரையறை என்ற பிரச்சினையைத் தீர்மானிக்கவில்லை. வழக்குபொருளைக் கருத்திற்கொண்டு பார்த்தால், இப்பிரச்சினையை விவாதிப்பதும், பிரிவு 14 ஏன் பொருந்தவில்லை என்பதைக் குறித்து சுட்டிக்காட்டுவதும் தக்கதென தெரிகிறது.

21.4. எந்த உரிமை வழக்கிலும் காலவரையறையைக் கணக்கிடுகையில், பிரச்சினைக்குரிய வழக்கு, முந்தைய வழக்கு நடவடிக்கையைப்போன்று ஒரேமாதிரியாக இருக்குமிடத்து, அதிகாரவரம்பு கொண்டிராத ஒரு நீதிமன்றத்தில் நல்லெண்ண உரிமையியல் வழக்கு நடவடிக்கையைத் தொடருவதில் செலவிடப்படும் காலத்தை விலக்குவதற்கு, காலவரையறைச் சட்டத்தில் உள்ள அத்தகையதொரு வகையமான பிரிவு 14 வகைசெய்கிறது. இவ்வகையத்தின் தலைப்பும், அதனுடைய உட்பிரிவு (1)-ம் கீழ்க்கண்டவாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது:

> *"14. **அதிகாரவரம்பற்ற நீதிமன்றத்தில் நல்லெண்ணத்தின்பாலான வழக்கு நடவடிக்கை காலத்தை விலக்குதல்.-** (1) எந்த உரிமை வழக்குக்குமான காலத்தைக் கணக்கிடுகையில், வாதி, பிரதிவாதிக்கு எதிராக முதல்நிலை அல்லது மேல்முறையீட்டு அல்லது சீராய்வு நீதிமன்றத்தில் மற்றொரு உரிமையியல் வழக்கு நடவடிக்கையை உரிய சிரத்தையுடன் தொடர்ந்து நடத்துகிறபோது, அந்த வழக்கு நடவடிக்கை பிரச்சினைக்குரிய வழக்கைப்போன்று ஒரேமாதிரியாக இருந்து, நீதிமன்றத்தில் நல்லெண்ணத்தின்பால் தொடுக்கப்பட்டு, அது அதிகாரவரம்பு குறைபாட்டினாலோ அல்லது இதுபோன்ற வேறு காரணத்தினாலோ*

ஏற்க இயலவில்லையென்றால், அவ்வழக்கு காலம் விலக்கப்பட வேண்டும்."

21.4.1. காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-இன் பொருந்துகைக்கான அடிப்படை தேவைப்பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்ற தொடர்புடைய பயனுள்ள தீர்முடிவுகளை நாம் குறிப்பிடலாம். **மாதவ்ராவ் நாராயணராவ் பத்வர்தன் -எதிர்- இராம்கிருஷ்ண கோவிந்த் பானு மற்றும் பலர் : ஏ.ஐ.ஆர். 1958 எஸ்.சி. 767** என்ற வழக்கில், பிரிவு 14-இன் பொருட்டு வாதியின்பேரிலான தேவைப்பாடுகளை இந்நீதிமன்றம் பின்வருமாறு சுட்டிக்காட்டியது:-

"6. .....வாதி அவரது வழக்கை மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுக்குள் கொண்டுவருவதன்பொருட்டு, அவர்:

(1) மீரஜ்ஜில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்தில் முந்தைய உரிமை வழக்கை உரிய சிரத்தையுடன் தொடர்ந்திருந்தார் என்பதையும்,

(2) முந்தைய உரிமை வழக்கு அதே வழக்குமூலத்தின் அடிப்படையிலானது என்பதையும்,

(3) அது அந்நீதிமன்றத்தில் நல்லெண்த்தின்பால் தொடுக்கப் பட்டிருந்தது என்பதையும்,

(4) அவ்வுரிமை வழக்கு அதிகாரவரம்பு குறைபாட்டின் காரணமாகவோ அல்லது இதுபோன்ற வேறு காரணத்தினாலோ அந்நீதிமன்றம் ஏற்க இயலவில்லை என்றாலோ..... அதனையும் உறுதிசெய்கிறவகையில் காண்பிக்கவேண்டும்."

21.4.2. மேலும், **ஜாபர் கான் மற்றும் பலர் -எதிர்- போர்டு ஆ.ப் ரெவன்யூ, உத்தரப் பிரதேசம் மற்றும் பலர் :** *1984 (சப்ளி.)* **எஸ்.சி.சி.** *505* என்ற வழக்கில், இந்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதாவது:

> *"13. பிரிவு 14(1)-இன் பொருந்துகையை ஈர்க்கும்பொருட்டு, அதன் பயனைக் கோரும் தரப்பினர்கள், (i) வாதியான தரப்பினர் உரிய சிரத்தையுடன் மற்றொரு உரிமையியல் வழக்கு நடவடிக்கையைத் தொடுத்திருந்தார் என்றும் (ii) முந்தைய வழக்கு நடவடிக்கையும் பிந்தைய வழக்கு நடவடிக்கையும் பிரச்சினைக்குரிய ஒரே வழக்குக்குத் தொடர்புடையது என்றும் (iii) முந்தைய வழக்கு நடவடிக்கை ஒரு நீதிமன்றத்தில் நல்லெண்ணத்தின்பால் தொடுக்கப்பட்டிருந்தது என்றாலும், அது அதிகாரவரம்பு குறைபாட்டினாலோ அல்லது இதுபோன்ற வேறு காரணத்தினாலோ ஏற்கப்பட இயலவில்லை..... என்றும் நீதிமன்றத்தைத் திருப்தியுற செய்யவேண்டும்".*

21.4.3. (மேற்கண்ட) யஷ்வந்த் தியோராவ் என்ற வழக்கில், தீர்ப்புக் கடனாளிக்கு எதிராக ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக காலவரையறைக் காலத்தைக் கணக்கிடுகையில், அவருக்கு எதிரான நொடிப்புநிலை வழக்கு நடவடிக்கைகளில் செலவிடப்பட்ட காலத்தை, காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-இன் கீழ் விலக்க இயலாது, ஏனென்றால் இரு வழக்கு நடவடிக்கைகளும் ஒரே

பரிகாரத்தைப் பெறுவதற்கானதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானித்தது. இந்நீதிமன்றம் கூறியதாவது,-

"5. ..... நொடிப்புநிலை வழக்கு நடவடிக்கையில் கோரப்பட்ட பரிகாரம், நிறைவேற்றுதல் விண்ணப்பத்தில் கோரப்பட்ட பரிகாரத்திலிருந்து தெளிவாகவே வேறுபட்டிருக்கிறது. முந்தையதில், நொடிப்புநிலையராக கடனாளரைத் தீர்மானிக்கக் கோரப்படுகிறபோது, முதன்மையாக அடைவுற்றிருக்கும் அவரது சொத்து முழுவதும் அனைத்து கடனாளர்களின் நலனுக்காக சொத்துப் பேணுநராலோ அல்லது சொத்தாட்சியராலோ நேர்வுக்கேற்ப நிருவகிக்கப்படுகிறது, ஆனால் பிந்தியதில், கொடுக்கப்படவேண்டிய தொகை, சொத்தினைப் பற்றுகை செய்தல் மற்றும் நபரைக் கைது செய்தல் போன்ற நடைமுறைகள் வாயிலாக தீர்ப்பாணைப் பெற்றவரின் நலன் கருதியே தீர்க்கப்பட கோரப்படுகிறது. நொடிப்புநிலை நடவடிக்கைகளில் இறுதியாக, தீர்ப்பாணை பெற்றவர் தனது கடனை முழுமையாகவோ, பகுதியாகவோ தீர்த்துக்கொள்ள முடியுமென்றால், இதுதான் காரணம் அல்லது முடிவாக இருக்கலாம். இரு நடவடிக்கைகளிலும் வெவ்வேறு தன்மையான பரிகாரம் கோரப்பட்டதோடன்றி, அவற்றின் நடைமுறையும் பெரிதும் மாறுபட்டிருந்தது."

21.4.4. மேலும், **காசிநாத் சங்கரப்பா -எதிர்- தி நியூ ஏகாட் காட்டன் ஜின்னிங் அண்டு பிரஸ்ஸிங் கம்பெனி லிட் : ஏ.ஐ.ஆர். 1951 நாக்பூர் 255** என்ற வழக்கில் நாக்பூர் உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத் தீர்முடிவினையும் நாம் குறிப்பிடலாம், அதில், உரிமையியல் நீதிமன்றத்தில் கடன் வசூலிப்பதற்கான ஒரு வழக்கு நடவடிக்கையில், நிறுமக் கலைப்பு நடவடிக்கையில் செலவிடப்பட்ட காலத்தை விலக்கமுடியுமா? என்பது குறித்த வினாவின்பேரில், உயர் நீதிமன்றம் எதிர்மறையாக விடையளித்ததாவது:

> *"28. எந்தக் காரணங்களின் அடிப்படையில் ஒரு நிறுமம் கலைக்கப்படலாம் என்பது குறித்து நிறுமங்கள் சட்டம், பிரிவு 162-இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை அதிக எண்ணிக்கையிலுள்ளன. விண்ணப்பம் பிரிவு 162(v)-இன் கீழானது அதாவது, நிறுமம் அதன் கடன்களைச் செலுத்த இயலவில்லை என்று அனுமானித்துக்கொண்டாலுங்கூட, "அதன் கடன்களைச் செலுத்த இயலவில்லை" என்ற சொல்லமைப்பு மூன்று வெவ்வேறு கோட்பாடுகளைத் தழுவிநிற்கிறது எனப் பிரிவு 163(1) காண்பிக்கிறது. விண்ணப்பம் இக்குறிப்பிட்ட கடனுக்கானது என்பதைக் காண்பிக்க எதுவுமில்லை. ஆனால், பிரிவு 163(1)-இல் உள்ள நிறுமக் கலைப்பு நடவடிக்கைகளில், நிறுமம் அதன் கடன்களைச் செலுத்த இயலாமலிருப்பதே அதன் வழக்குமூலமாகும் என்றாலுங்கூட, இங்குள்ளதைப்போன்று, கடன் வசூலிப்பது அல்ல. நிறுமக் கலைப்பு உத்தரவிடப்பட்டு*

நிறுமக் கலைப்பு அதிகாரி நியமிக்கப்படும் வரையில், கடன் வசூலிப்பு என்ற பிரச்சினை எழவில்லை. நிறுமத்திற்கு எதிரான கோரிக்கைகள் விசாரிக்கப்பட்டு, முடிவெடுக்கப்படும் கட்டத்தில்தான் இது எழுந்துள்ளது. ஆகையால், அந்த வழக்கு நடவடிக்கைகளின் வழக்குமூலமும், இங்குள்ள வழக்குமூலமும் ஒன்றல்ல. பிரிவு 14 ஈர்க்கப்படவில்லை என்பதே இதன் முடிவாகும்."

21.4.5. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் குறிப்பிடப்பட்ட தீர்முடிவுகள் வெவ்வேறு சூழ்நிலைகளில் எடுக்கப்பட்டவையாகும். *(மேற்கண்ட) இராமேஷ்வர்லால்* என்ற வழக்கில், மேல்முறையீட்டாளராலான ஊதியக் கோரிக்கை, உரிமையியல் வழக்கு நடவடிக்கையில்தான் கோரத்தக்கது என்ற காரணத்தின் அடிப்படையில், அது நீதிப்பேராணை மனுவில் ஏற்கப்படவில்லை, அதன்பிறகே உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. முதலேற்பு வழக்கைக் கையாளும் நீதிமன்றத்துக்கு அதிகாரவரம்பு இல்லை என்பதையோ அல்லது வழக்கை ஏற்றுக்கொள்ள இதேபோன்ற வேறு காரணம் இருப்பதையோ கண்டறியவேண்டும் என்பதை இந்நீதிமன்றம் சுட்டிக்காட்டியதோடு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226-இன் கீழான நடவடிக்கைகளில், உயர் நீதிமன்றம், மனுதாரரை உரிமையியல் நீதிமன்றத்திலுள்ள உரிமை வழக்குக்கு அனுப்பிவைக்கையில், பரிகாரம் வழங்க வெளிப்படையாகவே மறுத்துவிட்டது என்பதையும் கண்டறிந்தது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைகளில், மனுதாரரை பரிகாரமின்றி விட்டுவிட இயலாது என இந்நீதிமன்றம் கருத்துரைத்தது. *(மேற்கண்ட) ஷிரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி* என்ற வழக்கில், பொதுவர் தீர்வம் முதலில் ஒரு நீதிப்பேராணை மனுவின் மூலம் எதிர்த்துரைக்கப்பட கோரப்பட்டது, அத்தீர்வம்,

பொதுவர் தீர்வு மற்றும் இணக்கமுறைச் சட்டம், 1996, பிரிவு 34-இன் கீழ் எதிர்த்துரைக்கப்பட்டிருக்கவேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் அது நிலைநிறுத்தத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர், மாவட்ட நீதிபதி, மேற்படி 1996-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் விண்ணப்பம் காலவரையறையால் தடை செய்யப்பட்டிருப்பதாகக் கூறி அதனை தள்ளுபடி செய்தார். காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-இன் பொருந்துகை விலக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கண்டறிந்தது, எனவே, உயர் நீதிமன்றம் முன்பான பரிகாரத்திற்காக வழக்கை நடத்துவதில் மேல்முறையீட்டாளரால் செலவிடப்பட்ட காலத்தை விலக்க இயலுமா? என்பதை மாவட்ட நீதிபதி ஆராய்வதற்கு வழக்கு திருப்பியனுப்பப்பட்டது.

21.4.6. மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து தீர்முடிவுகளிலும் பொதுவாக இழையோடியிருக்கும் விடயம் யாதெனில், காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-இன் பொருந்துகை குறித்தும், முந்தைய வழக்கு நடவடிக்கையில் செலவிடப்பட்ட காலத்தை விலக்குவது குறித்துமாகும், மேலும் பிரச்சினைக்குரிய வழக்கு, முந்தைய மற்றும் பிந்திய வழக்கு நடவடிக்கையில் ஒன்றாக இருக்கவேண்டும். இது தவிர, முந்தைய வழக்கு நடவடிக்கை உரிமையியல் வழக்கு நடவடிக்கையாக இருந்து, வாதியால் உரிய சிரத்தையுடன் வழக்கு தொடரப்பட்டிருக்கும் ஒரு நீதிமன்றம் அதிகாரவரம்பு குறைபாடுடையதாகவோ அல்லது இதுபோன்ற வேறு காரணத்தினாலோ, வாதி அந்நீதிமன்றத்தில் நல்லெண்ணத்தின்பால் வழக்கு தொடர்ந்திருந்தாலும், அதனை ஏற்க இயலவில்லை என்ற இதர தேவைப்பாடுகளும் இருக்கின்றன.

21.5. தற்போதைய வழக்கில், 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட நீக்கல் உத்தரவினை எதிர்த்துரைக்கும் முந்தைய நீதிப்பேராணை மனு, ஓர் உரிமையியல் வழக்கு நடவடிக்கைக்கானதாகும் என்னும் சங்கதியைத் தவிர, வாதி உரிய

சிரத்தையுடன் வழக்கு தொடர்ந்திருந்தனர் என்றாலும், காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-இன் இதர தேவைப்பாடுகள் எவையும் நிறைவுசெய்யப்படவில்லை. முந்தைய மற்றும் பிந்திய வழக்கு நடவடிக்கையிலுள்ள பிரச்சினைக்குரிய வழக்கு ஒன்றாக இருக்கவேண்டும், மேலும் முந்தைய மற்றும் பிந்திய இரு வழக்கு நடவடிக்கைகளும் ஒரே வழக்குமூலம் மற்றும் ஒரே பரிகாரம் தொடர்புடையதாக இருக்கவேண்டும் என்ற அடிப்படைத் தேவை முற்றிலும் விடுபட்டுள்ளது. அதைவிட, முந்தைய வழக்கு நடவடிக்கையிலுள்ள பிரச்சினைக்குரிய விடயம், தற்போதைய உரிமை வழக்கிலுள்ள பிரச்சினைக்குரிய விடயத்திலிருந்து பெரிதும் மாறுபட்டிருக்கக்கூடியதாகும். மேற்படி முந்தைய வழக்கு நடவடிக்கையில், வாதியான மேல்முறையீட்டாளர் மடத்துடன் சேர்ந்துகொண்டு, எதிர்மேல்முறையீட்டாளரான மாநில அரசு பிரச்சினைக்குரிய காப்பிடத்திலிருந்து நிலத்தை நீக்க தகுதிகொண்டதல்ல என்றும், மாநில அரசு நிலத்தை எடுத்துக்கொண்டு, அதன் அலுவலர்கள் சிலரால் முன்மொழியப்பட்டவாறான இழப்பீட்டினைச் செலுத்தியிருக்கவேண்டும் என உறுதிபட கூறியது. அதற்குமாறாக, தற்போதைய உரிமை வழக்கிலுள்ள கோரிக்கை, வாதி, 1972-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழான நடவடிக்கைகளின் காரணமாகவும், பின்னர், கையகப்படுத்துதலிலிருந்து வழக்கு நிலத்தை நீக்கியதன் காரணமாகவும், இழப்புக்குள்ளானார் என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். தற்போதைய உரிமை வழக்கில் கோரப்பட்ட பரிகாரமும், இங்குள்ள பிரச்சினைக்குரிய விடயமும் ஒன்றாக இருப்பதாகச் சொல்லிவிட முடியாது, ஏனென்றால் முந்தைய வழக்கு நடவடிக்கைகான மேற்படி நீதிப்பேராணை மனுவிலுள்ள பிரச்சினை, 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட நீக்கல் உத்தரவை எதிர்த்துரைத்திருந்ததாகும். முந்தைய வழக்கு நடவடிக்கையான மேற்படி நீதிப்பேராணை மனு, 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட நீக்கல் உத்தரவை தள்ளுபடி செய்வதற்கான ஒரு

மாறுபட்ட பரிகாரத்திற்கானதாகும், மேலும், மேற்படி நீதிப்பேராணை மனு நற்கூறுகளின்பேரில் தள்ளுபடி செய்யப்பட்டதேயன்றி, அதிகாரவரம்பு இல்லை என்பதற்காக அல்ல. இவ்வழக்கில் காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-இன் பொருந்துகை முற்றிலும் விலக்கப்பட்டுள்ளது.

21.6. 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி உத்தரவு, நட்டஈடு/இழப்பீடு கோருவதற்கு மேல்முறையீட்டாளருக்கு காரணம் ஏதும் அளித்திருந்தால், அத்தேதியிலிருந்தே காலவரையறை தொடங்கியிருந்திருக்கும். மேலும் நீதிப்பேராணை மனுவின் மேற்படி வழக்கு நடவடிக்கை, அத்தகைய காலவரையறையின் செயல்பாட்டினை ஒருபோதும் நிறுத்திவிடாது. 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி உத்தரவு, 13.9.1995 அன்று கற்றறிந்த தனியமர் நீதியரசரால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், நீதியர் ஈராயம் 18.9.1997 அன்று, அரசின் மேல்முறையீட்டை அனுமதித்தபோதுதான், அது மீண்டும் புதுப்பிக்கப்பட நேர்ந்தது என்றும், ஆகவே, காலவரையறை, நீதியர் ஈராயத் தீர்ப்புரை நாளிலிருந்து தொடங்கும் என்றும் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்துள்ளார். தொடக்கத்தில் இந்த அறுதியுரை ஈர்க்கப்பட்டதாகத் தெரிந்தாலும், வழக்கை கூர்ந்தாராய்ந்ததன்பேரில் அது ஏற்கப்பட இயலாது. நட்டஈட்டுக்காக வழக்கு தொடரும் உரிமையைப் பொறுத்தவரையில், நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்படுதலோ அல்லது அதில் பிறப்பிக்கப்படும் ஏதும் உத்தரவோ, 19.11.1993-ஆம் தேதியன்று தொடங்கிய காலவரையறையை தடைசெய்வதில் செயல்படாது. வாதி-மேல்முறையீட்டாளர் விழிப்புடன் 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து நட்டஈடு கோர விரும்பவில்லை, அதற்குப்பதிலாக, மடத்துடன் சேர்ந்துக்கொண்டு, 19.11.1993-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டதற்கும், காப்பிடத்திலிருந்து

நிலம் நீக்கப்படாததற்கும் பரிகாரம் கோரியது. அத்தகையதொரு முயற்சியில் தோல்வியடைந்ததால் மேல்முறையீட்டாளர், 1998-ஆம் ஆண்டில் உரிமை வழக்கு தாக்கல் செய்ததன் வாயிலாக நட்டஈட்டுக்கான கோரிக்கையை நிலைநிறுத்தியிருக்க இயலாது.

21.7. மேற்படி மனுவில் செலவிடப்பட்ட காலம் உடனடியாக நீக்கப்படக்கூடியது என்பதைப்போல் கருத்துரைக்கும் 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவில் நீதியர் ஈராயத்தின் கருத்துரைகளால் எந்தப் பயனுமில்லை, ஏனென்றால் நீதியர் ஈராயம், மேற்படி நீதிப்பேராணை வழக்கை விவாதிக்கையில், உரிமை வழக்கு காலவரையறைப் பிரச்சினையை முன்கருதி தீர்வுசெய்யக்கூடியதல்ல. 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையில், நீதியர் ஈராயத்தால் பயன்படுத்தப்பட்ட அறுதியான சில சொல்லமைப்புகள் தேவையற்றவை என்றாலும், எவ்வகையிலும் நட்டஈட்டுக்கான உரிமை வழக்குத் தொடர்பான பிரச்சினை தீர்ந்தபாடில்லை. 18.9.1997-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி தீர்ப்புரையை முழுமையாகப் படித்தால் எதிர்கால நடவடிக்கையெடுப்பதற்கு பிரிவு 14-இன் பொருந்துகையைப் பொறுத்தவரையில் இறுதி முடிவெடுக்க இயலாது என்பதை இனியும் சொல்வதற்கில்லை. குறிப்பிடத்தக்கவகையில், காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14 தற்போதைய உரிமை வழக்குக்கு பொருந்தாது, அதாவது அது காலவரையறையால் தடைசெய்யப்பட்டிருப்பதால், உரிமை வழக்கு இக்காரணத்திற்காக மட்டுமே தள்ளுபடி செய்வதற்குரியதாகும்.

22. 16.11.1976-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்படி, மரங்களை வெட்ட அனுமதி மறுத்ததைப் பொறுத்தவரையில், அதனடிப்படையில் நட்டஈட்டுக்கான கோரிக்கை செய்ய வாதி-மேல்முறையீட்டாளர் உரிமையேதும் கொண்டிருந்ததெனில், அதனை அத்தேதியிலிருந்து காலவரையறைக்குள் செய்திருக்கவேண்டும். அது தொடர்பான

பரிகாரத்தை, 20 ஆண்டுகள் கழித்து உரிமை வழக்கு வாயிலாக கோரியிருக்கக்கூடாது என நாங்கள் கருத்துரைக்கிறோம்.

<u>முடிவு</u>

23. மேற்சொன்ன விவாதத்தின் இறுதிமுடிவு யாதெனில், வாதி-மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்பட்டுவிட்டது, அதாவது இது வாதி-மேல்முறையீட்டாளர், எதிர்மேல் முறையீட்டாளர்-அரசிடமிருந்து நற்கூறுகளின்பேரில் நட்டஈடு கோருவதற்குரிய வழக்கல்ல என்பதாகும். உயர் நீதிமன்ற நீதியர் ஈராயம், அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை அனுமதித்து, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படையற்ற உரிமை வழக்கை சரியாகவே தள்ளுபடி செய்துள்ளது.

24. அதன்படி, மேற்படியானதைக் கருத்திற்கொண்டு, இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்கின் சூழ்நிலைகளின்படி, தரப்பினர்கள் தத்தமக்குரிய வழக்குச் செலவுகள் முழுவதையும் தாமே ஏற்றுக்கொள்வதற்குரியவராவர்.

மாண்புமிகு நீதியரசர் திரு. அபய் மனோகர் சாப்ரே

மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மகேஸ்வரி

புது தில்லி,

20.08.2019.

.....

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."